தமிழின் ஆக்கம் – தடையும் விடையும்

வரிப்புலியே, தமிழ் காக்க எழுந்திரு!

ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின் முன்னேற்றம்
ஒவ்வொன்றும் உன்முன் னேற்றம்!
கண்டறிவாய்! எழுந்திருநீ! இளந்தமிழா,
கண்விழிப்பாய்! இறந்தொ ழிந்த
பண்டைநலம் புதுப்புலமை பழம்பெருமை
அனைத்தையும்நீ படைப்பாய்! இந்நாள்
தொண்டுசெய்வாய்! தமிழுக்குத் துறைதோறும்
துறைதோறும் துடித்தெ ழுந்தே!

உயர்தமிழ்த்தாய் இந்நிலத்தில் அடைகின்ற
வெற்றியெலாம் உன்றன் வெற்றி!
அயராதே! எழுந்திருநீ! இளந்தமிழா,
அறஞ்செய்வாய்! நாம டைந்த
துயரத்தைப் பழிதன்னை வாழ்வினிலோர்
தாழ்மையினைத் துடைப்பாய் இந்நாள்
செயல்செய்வாய் தமிழுக்குத் துறைதோறும்
துறைதோறும் சீறி வந்தே.

– பாவேந்தர் பாரதிதாசன்

தமிழ் நேயம்

வெளியீடு - 1

தமிழின் ஆக்கம் – தடையும் விடையும்

கருத்துரைகள்

ஐந்து சிறுநூல்கள் தொடர்ச்சியாக வெளியிடப்படும்
பெற விரும்புவோர் : ரூ.50 அனுப்புங்கள்

தமிழின் ஆக்கம் – தடையும் விடையும்

முகப்புரை

தமிழின், தமிழ்க் கல்வியின் இன்றைய நிலை குறித்து நாம் கவலைப்படுகிறோம். தமிழின் ஆக்கத்திற்கு அரசு தான் செய்ய வேண்டிய கடமைகளை பொறுப்போடு செய்யவில்லை. கல்வியாளர்கள் தமிழை, காக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை. ஆங்கில ஆதிக்கத்தோடு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்கின்றனர். பத்திரிகைகளில் தமிழுக்கு முதன்மை இல்லை. திரைப்படங்களிலும், தொலைக்காட்சியிலும் கொச்சைத் தமிழோடு ஆங்கிலக் கலப்பு அதிகரிக்கிறது. செம்மொழி என்று அரைகுறையான அறிவிப்போடு நம்மவர் விழாக்கள் நடத்துகின்றனர். தமிழ் நமக்கு ஆற்றலாக இல்லை. உரிதாக இல்லை. தமிழ் மரபை நாம் கைவிடுகிறோம். வரலாற்றில் தமிழை நாம் காப்பாற்றி வைப்பதைப் பற்றி நம்பிக்கை இழந்து வருகிறோம்.

தமிழின் நலம் என்பது தமிழ் மக்களின் நலம். உழைக்கும் மக்களின் நலம் இயற்கையின் நலம் என்றெல்லாம் நமக்குப் புரிதல் இல்லை. தமிழை வைத்து அரசியல் நடத்தத் தெரிந்திருக்கிறோம். அரசியல் அதிகாரம் நமக்குப் போதும். பணம் – பதவிகள் நமக்குப் போதும் – தன்மானம் நமக்குத் தேவையில்லை. பெயரளவுக்கு பகுத்தறிவு என்று சொல்லிக் கொள்கிறோம். சாதி, மதங்களோடு நாம் சமரசம் செய்து கொண்டிருக்கிறோம். சமத்துவமும் சமதர்மமும் இல்லாமல் நமக்கு வாழ்வு இல்லை என்று நாம் நம்பவில்லை.

இந்த நிலை நமக்கு எப்படி நேர்ந்தது? வரலாற்றில் நாம் என்னவாகிக் கொண்டிருக்கிறோம்? இவைபற்றியெல்லாம் நாம் இப்பொழுது கவலையோடு சிந்திக்கிறோம். கோவையில் தமிழ்நேயம் சார்பில் 2004 செப்டம்பரில் தமிழின் ஆக்கம் – தடையும், விடையும் என்னும் பொருளில் நாங்கள் நடத்திய கருத்தரங்கில் இத்தகைய கவலைகள் வெளிப்பட்டன. ஒரு சிலர் மட்டும் வெளிப்படுத்துகிற கவலைகளாக இவை இல்லை. தமிழகம் முழுவதிலும் பரவியுள்ள உணர்வாளர்கள், தமிழ்ச் சிந்தனையாளர்கள், தமிழ் இயக்கத்தினர் என எத்தனையோ பேர் இத்தகைய கவலைகளையும் சிந்தனைகளையும் கொண்டுள்ளனர். நமக்குள் பார்வைகள் மாறுபடலாம். மாறுபட்ட, முரண்பட்ட கருத்துக்களும் நமக்குள்ளிருந்து வெளிப்படலாம். இவை பற்றியெல்லாம் நிதானமாக நம்மால் சிந்தித்து சில முடிவுகளுக்கு வரமுடியும்.

இத்தகைய சிந்தனைகளை தொகுக்கும் முறையில் தமிழ் நேயத்தின் சார்பில் இந்த சிறு வெளியீடு வருகிறது. இந்த வெளியீடு இரண்டு

மாதங்களுக்கொருமுறை தொடரும். குறைந்தது ஒரு நூறு பேர்களின் கருத்துக்களையாவது தொகுப்பது நம் நோக்கம். மாறுபட்டக் கருத்துக்கள், பார்வைகளுக்கு இடையில் நாம் எங்கிருக்கிறோம் என்று ஒவ்வொருவரும் சிந்தித்து தெளிவு பெற முடியும். நம்மை நாமே திருத்திக் கொள்ளவும் மேம்படுத்திக் கொள்ளவும் இத்தகைய ஆய்வு பயன்படும். தமிழ்ப் பேரியக்கத்தினுள் நாம் இணைந்திருக்கிறோம். தமிழ் நமக்கு உணர்வு என்றும் உயிர் என்றும் நாம் நம்புகிறோம். தமிழோடு தமிழ் மக்களோடு, தமிழ் வரலாற்றோடுதான் நமக்கு வாழ்வு என்று நம்புகிறோம். வள்ளுவர், இளங்கோ முதலியவர்களுக்கு நாம் வாரிசுகள். தமிழின் அறம், வீரம் நம்மைக் காக்கும்.

தமிழ் நேயத்தின் இத்தகைய முயற்சிக்கு தமிழ் அன்பர்களின் ஒத்துழைப்பை பெரிதும் வேண்டுகிறோம். உடனடியாக உங்கள் உணர்வுகளையும், கருத்துக்களையும் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும் முறையில் எழுத்தாக்கி தமிழ் நேயத்திற்கு அனுப்புங்கள். செரிவான உங்கள் கருத்துக்களை நான்கு பக்க அளவில் 1,2,3 என வரிசைப்படுத்தி அனுப்புங்கள். உங்கள் கருத்துரையோடு நிதி உதவியும் கிடைக்குமானால் அடுத்தடுத்த வெளியீடுகள் விரைவில் உங்களை வந்தடையும்.

தங்கள்

ஞானி

தமிழ் நேயம், 24, வி.ஆர்.வி. நகர்,
ஞானாம்பிகை ஆலை அஞ்சல், கோவை – 641 029.
தொலைபேசி : 0422 – 2648119

நெஞ்சு பதைக்கும் நிலை

கரும்புதந்த தீஞ்சாறே, கனிதந்த
நறுஞ்சுளையே, கவின்செய் முல்லை
அரும்புதந்த வெண்ணகையே அணிதந்த
செந்தமிழே அன்பே, கட்டி
இரும்புதந்த நெஞ்சுடையார் துறைதோறும்
நின்னெழிலை ஈட ழித்து
வரும்புதுமை நினைக்கையிலே நெஞ்சுபதைக்
கும்சொல்ல வாய்ப தைக்கும்.

– பாவேந்தர் பாரதிதாசன்

ந. முத்துக்குமரன்

முன்னுரை :

தமிழின் ஆக்கம் என்பதும் வெறும் மொழி ஆக்கம் மட்டும் அன்று பேசும் மக்கள், வாழும் நாடு இவற்றின் ஆக்கமும் சேர்ந்தது ஆகும்.

மொழியை ஆதனாகவும் (ஆன்மா) அதைப் பேசும் தமிழர்களை உயிராகவும் அவர்கள் வாழும் தமிழ்நாட்டை உடலாகவும் கருதினால்தான் இம்மூன்றும் தனித்தனிப் பெட்டிகள் அல்ல ஒன்றையொன்று சார்ந்திருப்பவை என்ற உண்மை விளங்கும்.

தமிழின் ஆக்கம் :

தமிழ்மொழி ஒரு சிறந்த கருத்து பரிமாற்றக் கருவியாக இருப்பது தவிர்க்கப்பட்டிருப்பது ஒரு மாபெரும் தடையாகும். தொலைக்காட்சி, வானொலி, நாள், கிழமை, மாத இதழ்கள் முதலிய ஊடகத் துறைகளிலும், அரசு அலுவலகங்கள், நீதிமன்றங்கள், பள்ளி, கல்லூரி போன்ற கல்வி நிலையங்கள் இவற்றில் எல்லாம் தமிழ் தவிர்க்கப்பட்டிருக்கின்றது. கோயில் வழிபாடு, குடும்ப வாழ்வின் நலம், பொலங்கள் முதலிய வாழ்வியல் நிகழ்வுகளிலும் தமிழ் தவிர்க்கப்பட்டிருக்கிறது.

விடை :

1) ஊடகங்களில் நல்ல தமிழ் வழங்க ஒரு கூட்டம் அணி திரள வேண்டும்.

தமிழைச் சிதைக்கும் இதழ்களுக்கு எச்சரிக்கை விடவேண்டும். இன்னொரு அணி, தொலைக்காட்சி, வானொலி முதலிய துறைகளைத் தொடர்பு கொண்டு எச்சரிக்க வேண்டும்.

2) தமிழ்வழிக் கல்வியை ஓர் உரிமைப் போராட்டமாக வளர்த்தெடுக்க அரசுப் பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே தமிழில் கற்றோருக்கே தமிழ் நாட்டில் வேலைவாய்ப்பில் முன்னுரிமை என்கின்ற கொள்கையை முன்னெடுத்துச் செல்ல ஓர் அணி செயல்பட வேண்டும்.

3) தமிழர் இல்லங்களில் நடைபெறும் விழாக்களிலும் கோயில்களிலும் தமிழ் நெறியே தழைக்கப் பாடாற்றும் தனிக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

தமிழரின் ஆக்கம் :

இன்றைய தமிழினத்தின் முதன்மையான நோய்கள் மூன்றாகும். அவை சாதி, மதம், கட்சிகள் ஆகும்.

1) தலித்துகளுக்கும், நடுச்சாதியினருக்கும் இடையில் ஏற்படும் முரண்பாடுகளை ஆராய்ந்து அவற்றிற்கான தீர்வுகளை ஊடகங்களுக்குக் கொண்டுவர வேண்டும். இதற்குச் சாதி உணர்விலிருந்து வெளியேறிய தமிழ் உணர்வு பெற்ற தொண்டர்கள் வேண்டும்.

"சாதி ஒழித்திடல் ஒன்று; நல்ல தமிழ் வளர்த்தல் மற்றொன்று
பாதியை நாடு மறந்தால் மற்றப்பாதி துலங்குதல் இல்லை"
எனும் பாவேந்தர் அடிகளை உன்னுக.

2) பெரியார் பிறந்த மண் என்று பெருமை பேசுகின்றோம். இங்கே தான் கடந்த 10 ஆண்டுகளுக்குள் மதவெறியைத் தழைக்க வைக்க முடிந்திருக்கின்றது. இவற்றை எதிர்கொள்ள மத நல்லிணக்க குழுக்கள் மாவட்ட, வட்ட வாரியாக அமைக்கப்பட்டு ஊர்கள் தோறும் எழும் சிக்கல்களை அங்கங்கே தீர்த்து வைப்பதற்கு அணியமாக்க வேண்டும்.

கட்சி :

தமிழினத்தின் நலம் தழுவிய சிந்தனைக்கு இன்றைய கட்சி அமைப்புகள் துணையாக இல்லாதது மட்டும் அல்லாமல் தடையாகவும் இருக்கின்றன. எனவே ஒவ்வொரு ஊரிலும் சாதி, மத, கட்சி கடந்த தமிழினப் பொதுச் சபைகள் அமைத்துக் கலந்துரையாடல் மூலமாகக் கட்சித் தடைகளை நீக்கிக் கொள்ளலாம்.

தமிழ்நாட்டின் ஆக்கம் :

பசுமைப் புரட்சியின் விளைவாக தமிழ் நிலத்தில் கொட்டப் பெற்றுள்ள வேதி உரங்களும், பூச்சிக் கொல்லி நச்சுகளும் தமிழ் மண்ணை உயிரினங்கள் வளர இயலா மண்ணாக, "மலட்டுநிலம்" ஆக ஆக்கி விட்டன.

தமிழ் நாட்டின் ஆறுகள், கடல், காற்று ஆகியவை உலகமயமாதல் என்ற பெயரால் கொள்ளையடிக்கும் வேட்டைக் காடாக்கி இருக்கின்றது. தொழிற் சாலைகளின் நச்சுகள் நாம் இழுக்கும் மூச்சுக் காற்றையும் பருகும் நீரையும் மாசுபடச் செய்துள்ளன.

மேற்கண்ட மாசுபாடுகளால் தமிழக உழவர்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்கள் அனைவரின் அன்றாட உணவு நஞ்சாக்கப்பட்டிருக்கின்றது. பூச்சிக் கொல்லி நச்சுகளின் எச்சங்கள் மாட்டுப் பாலில் மட்டும் அன்று தாய் பாலிலும் கலந்துள்ளன என்பது நமக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை மணியாகும்.

விடை :

இவற்றை எதிர்கொள்ளும் பொழுது

அ) நஞ்சில்லா உணவை விளைவிக்கும் உழவர்களுக்கு துணையாகத் தொழில்நுட்ப அணி நாட்டுப்புறங்களில் உள்ள உழவர்களிடையே அமைக்கப்பட வேண்டும்.

ஆ) அவர்கள் விளைவிக்கும் நஞ்சில்லா உணவை நகர மக்களுக்கு பாத்திடு செய்ய ஓர் இயற்கை வேளாண் விற்பனைக் குழு அமைக்கப்பட வேண்டும்.

முடிவுரை :

இவையே தமிழின் ஆக்கத்திற்குத் தடையான கூறுகளுக்கு நான் கருதும் விடைகள் எனக் கருதுகின்றேன்.

செ. நாராயணசாமி

1. வங்கம், மலையாளம், கன்னடம், தெலுங்கு, மராட்டி, குசராத்தி, இந்தி, ஃபிரென்சு, செருமன் போன்ற மொழியினரிடம் உள்ள தாய்மொழி உணர்வு, பற்று, மதிப்பு, ஆர்வம், பேச்சு - எழுத்துப் பழக்கம், நடைமுறைப் படுத்தல் போன்ற இயல்புகள் தமிழரிடம் இல்லை.

2. "யார் தமிழர்?" என்ற தெளிவின்மை, தமிழ்நாட்டில் பிறந்தும், தமிழ் மொழி உணர்வும், பற்றும், அறிதலும் அற்றவர்கள் தமிழர்களா? என்ற வினா.

3. தமிழ்மொழி கற்பதற்குக் கடினமானது. இசைப்பாடல் இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்ட பழந்தமிழ் இலக்கணம் சிக்கலானது, புரிந்துகொள்ள, நினைவிறுத்திக் கடைப்பிடிக்க எளிதானதன்று, இலக்கண - இலக்கிய நூல்கள் புரியாத செய்யுள் நடையில், தற்காலப் பேச்சு-எழுத்து முறைக்குத் தொடர்பில்லாமல் உள்ளன. அவற்றிற்குப் பலசொல்லுரைகள், பொழிப்புரைகள், விளக்கவுரைகள் தேவைப் படுகின்றன.

4. ழ-ள, ர-ற, ந-ன, ண-ன, ஒற்றுகள், சந்திகளிலுள்ள மயக்கங்கள், குழப்பங்களை நீக்கி எளிதாக்கப்பட்ட தற்காலத் தேவைகளுக்கேற்ற உரைநடை இலக்கணம் இன்மை.

5. இலக்கியம், அறிவியல், பொறியியல், உயிரியல், நலவாழ்வியல், அளவை-சட்டவியல், அரசியல் துறைகளுக்கான பல அகரமுதலிகள் தரவு செய்யப்பட்டு, ஒருங்கிணைப்பதன் தேவை.

6. தமிழ் எழுத்து, மொழியமைப்பை எளிதாக்கும் திருத்தங்கள், சீரமைப்பு முயற்சிகள் தொடராமல், ஆதரவின்றித் தேக்க நிலையில் உள்ளன. பல துறைகளில் நுணுக்கங்களைக் கற்பதற்கு ஏற்றதாகத் தமிழ் மொழியை மாற்றி முன்னேற்ற வேண்டும்.

7. தற்காலத் தமிழகத்தில் மொழியொரு தகவல் தொடர்பு, கருத்துப் பரிமாற்றக் கருவியாக மட்டுமே கருதப்படுகிறது. அதற்காக எளிதான ஆங்கில - வடசொல் கலப்படப் பேச்சு - எழுத்து முறைகள் வேகமாகப் பரவியுள்ளன.

8. தமிழ்மொழிக் கல்வி வாழ்க்கைப் பயணத்தில் வேலை வாய்ப்புகள், வணிகத்துறை, அரசியல்-ஆட்சித் துறைகளில் பயன்படுத்தாமல் ஒதுக்கப்பட்டுள்ள நிலை. "தமிழ்க் கல்வி சோறு போடுமா?" என்ற வினா. கல்வி பயிற்றுவிக்கும், பாடநூல் முறைகளில் தேவைப்படும் கணிசமான மாற்றங்கள்.

9. கற்றவர்களிடையேயும், கல்லாதவர்களிடையேயும், குறிப்பாகப் பெற்றோரிடம் பரவியுள்ள ஆங்கில-வடமொழி மோகம். இந்த

வேற்றுமொழிகளைக் கலந்து பேசுவதே சமுதாயத்தில் மதிப்பு தரும் என்ற தவறான எண்ணம், புரிதல்.

10. நடப்பது நடக்கட்டும் நமக்கென்ன என்று தேமே என்றுள்ள கையறுநிலை.

11. ஆங்கில மொழிப் பள்ளிகளின் அளவிற்கடங்காத வளர்ச்சி, வணிக, பண, அரசியல் ஆதிக்கம்.

12. கேரளம், கருநாடகம், ஆந்திரம் போன்ற பிற மாநிலங்களில் உள்ளதுபோலத் தமிழ்நாட்டில் தமிழ் கட்டாயப் பாடமொழியாகவோ, பயிற்று மொழியாகவோ, ஆய்வுநிலை மொழியாகவோ இன்மை. 1940–50 களில் தொடங்கிப் பள்ளிகளில் பயிற்று மொழியாக இருந்த நிலையை இழந்திருப்பது.

13. பெரும்பாலான அரசியல் கட்சிகளில், ஆட்சியாளரிடம் மொழிபற்றிய அக்கறை, ஆர்வம் இன்மை ஒதுக்கி வைக்கும், கண்டும் காணாத போக்கு, செம்மொழியாக அறிவித்து விளம்பர ஆதாயம் தேடுவதில் உள்ள ஊக்கம், தாய்மொழியைப் பாடமொழியாகவும், பயிற்றுமொழியாகவும் ஆக்கும் பேச்சோ, தேர்தல் அறிக்கைகளில் வாக்குறுதிகளோ அறவே இல்லை.

14. வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்கள், செய்தித் தாள்கள் – இதழ்கள் போன்ற ஒலி–ஒளி ஊடகங்களில் தமிழ்மொழி சீரழிக்கப்பட்டு சிதறியிருப்பது. அவற்றில் தமிழ் மொழி கையாளப்படும் முறைகள் இளிவானவை, கொடியவை.

15. தமிழ்மொழி உணர்வு, ஆர்வம் உடையவர்களிடையேயும் கருத்தொற்றுமை, செயல் திட்டம் இன்மை, பேச்சில் காட்டும் ஆர்வத்தில், 10 விழுக்காடு கூடச் செயலில் இல்லை.

16. உள்ளத்தில் உண்மையான பற்றின்றி, வெளியில் தமிழை உயர்வாகப் பேசி, செயலில் ஆங்கில–வட மொழிகளைக் கையாளும் வஞ்சகம், இரட்டைநிலை, ஆங்கில–வடமொழித் தொடர்பின்றித் தமிழ் தனித்து நிற்காது – செழிக்காது என்ற தவறான எண்ணம்.

17. வேற்று மொழிகள் கலப்பினால் பழந்தமிழ் இலக்கிய, நாட்டுப்புற வழக்குச்சொற்கள் பயன்பாட்டிலிருந்து மறைவது, இலக்கண–மொழிமரபு தழுவிய சொல் புத்தாக்கத்தில், அவற்றின் பயன்பாட்டில் ஆர்வம் குன்றுவது.

18. தமிழ்நாட்டு ஆலயங்களில், திருமணம், இறப்பு, நோன்பு, பண்டிகை போன்ற நிகழ்வுகளில் வடமொழி – வைதீகர் ஆதிக்கம் தமிழுக்குரிய இடத்தை, பயன்பாட்டை நிலைபெறச் செய்யும் முயற்சிகளுக்கு எதிர்ப்பு.

19. ஊடகங்களிலும், இசை, கூத்து, கேளிக்கைத் துறைகளிலும் ஆங்கில–வடமொழி ஆர்வலர்களின் ஆதிக்கம் தொடர்வது.

முனைவர் சந்திரா கிருஷ்ணன்

1. 'தமிழர்களுக்குள் முற்றத்து முல்லைக்கு மணமில்லை' என்ற உணர்வு காணப்படுகின்றது.
2. 'பெண் அடிமைத்தனம்' என்பது தமிழரின் உணர்வில் காணப்படுகின்றது. 'தமிழை'த் தமிழ்த்தாயாகச் சுட்டுகின்றோம்.
3. பிறரை எளிதாக நம்பும் தன்மை. (பலகாரம் செய்தல்)
4. தமிழ் மொழியில் பேசுவதே இழுக்கு என்னும் நிலை மாற வேண்டும்.
5. நிறத்தால் உயர்வு தாழ்வு என்னும் எண்ணம். (பெண் எடுத்தல் - வெள்ளை)
6. பிறரைப் பாராட்டும் தன்மை குறைவு.
7. வெளிநாட்டு - வெளிமொழி மோகம் அதிகம்.
8. பழம் பெருமை பேசுதல், சோம்பேறிகளாக இருத்தல்.
9. நிரந்தர வளர்ச்சியை நோக்கிப் போக வேண்டும் என்ற ஆர்வமின்மை.
10. வெள்ளையர்களை விரட்டியும் இன்றும் அடிமைத்தனம் மாறவில்லை.
11. வழி நடத்துனர், சொல் ஒன்று செயல் ஒன்றாக இருப்பதால் பெரியவர்களுக்கு இளைய சமுதாயம் சரியான மதிப்பு கொடுக்க இயலாமை.
12. தமிழ் ஆசிரியர்கள், நல்ல தமிழ் தெரிந்த ஆசிரியராக இல்லாதிருத்தல்.
13. திறமை வாய்ந்தவர், தங்களை அடையாளப்படுத்தாமல் ஒதுங்கிச் செல்லுதல்.
14. தமிழ் படித்தால் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையின்மை.
15. முந்தையர் பெருமை அழியாதிருத்தல்.
16. தமிழ் மண்ணின் சிறப்பு (முதல் மலை - மேற்குத் தொடர்ச்சி மலை) அழியாதிருத்தல்.
17. செம்மொழி என்றால் என்ன என்பது குறித்தும், 'உயர்தனிமொழியாக'த் தமிழ் இருப்பது குறித்தும் தமிழர் சரிவர அறியாதிருத்தல்.
18. உறவு முறைச் சொற்கள் தற்காலத்தில் குறைந்து வருதல்.
19. பெரியவர்கள் தன்னலம் மிக்கவராயிருத்தல்.
20. உறவு - வேலை - படிப்பு என எல்லாவற்றிலும் ஆதாயம் மட்டும் கருதிப் பழகும் வாய்ப்பு இன்றைய சூழலில் அதிகம்.
21. முன்னோர் சொல்வதை சிந்திக்காமல் அப்படியே பின்பற்றுதல்.
22. கல்வியில் -- மொழி வகுப்பு எடுக்கும் போது - பல வாய்ப்புக்களைத் தருவதாக, தமிழகக் கல்வித் திட்டம் அமைய வேண்டும்.

23. தமிழக கல்வித் திட்டத்தில் பொறியியல், மருத்துவம் முதலானவற்றிற்கு தமிழ் மதிப்பெண்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

24. தமிழரது பண்பாட்டின் தனித் தன்மை கல்வித் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

தீர்வு :

1. நாம் எந்த நல்ல செயலைச் செய்தாலும் மதிக்கும் இயல்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். செயலைப் பொறுத்து மதிப்பே தவிர – ஆளைப் பொறுத்து மதிப்பு என்பதை விட்டு விட வேண்டும்.

2. சமுதாயத்தில் ஆண் – பெண் சரிநிகர் என்பது பேச்சளவிலிருந்து செயலளவில் காணப்பட வேண்டும்.

3. வெளிமொழி – வெளிநாட்டுப் பொருட்கள் மீது 'மோகம்' குறைய வேண்டும். நிற அடிப்படையில் பாகுபாடு காணும் பழக்கம் விட்டொழிக்கப்பட வேண்டும்.

4. 'தாய் மொழியில் பேசுவதால் – சிந்திப்பதால் மட்டுமே குழந்தைகளின் மூளை வளர்ச்சி அதிகமாகும்' என்ற உளவியல் அடிப்படையிலான உண்மை பெற்றோர்களுக்குத் தகுந்த மருத்துவர்களைக் கொண்டு சொல்லித் தரப்பட வேண்டும்.

5. இயற்கையை நேசிக்கும் தன்மை இளைய அகவையிலேயே கற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

6. இன்று நாம் சாதிக்க வேண்டும் என்ற உணர்வை இளைய சமுதாயத்திடம் ஊட்ட வேண்டும்.

7. பெரியவர்கள் தன்னலம் கருதாது 'உண்மையான' வழிநடத்துனர்களாக இருக்க வேண்டும்.

8. தமிழ் படித்தவர்கள் மேலும் படிப்பைத் தொடர்ந்து படிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

9. தமிழர் – தமிழ் – தமிழ்நாட்டின் பெருமை குறித்த அறிவு இளமையிலேயே ஊட்டப்பட வேண்டும்.

10. 'தமிழ் மொழி' உலக அளவில் உள்ள செம்மொழி வரிசையில் ஒன்று என்ற சிறப்பு பல தமிழர்களுக்குத் தெரியாதிருக்கின்றது. தமிழ் படித்தவர்களுக்கே கூட சரியாகத் தெரியாது. இளமையிலேயே நமது தாய் மொழியின் சிறப்பைப் பதிய வைக்க வேண்டும்.

11. ஏன் – எதற்கு – என சிந்திக்கும் ஆற்றலை இளைய சமுதாயத்திலேயே ஊட்ட வேண்டும்.

12. பொறியியல் – மருத்துவம் முதலானவற்றிற்கு தமிழ் மதிப்பெண் களையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பேரா. க. பஞ்சாங்கம்

வணக்கம். தமிழின் ஆக்கத்திற்கு இன்றுள்ள தடைகள் என்ன? இவற்றைக் கடப்பதற்கான வழிகள் என்ன? அவசரம் அவசரமாகக் கேட்டிருக்கிறீர்கள்; நானும் அவசரம் அவசரமாகப் பதில் எழுதுகின்றேன். எனவே அவசரத்தனத்திற்கே உரிய பலவீனங்கள் இந்த எழுத்தில் காணக் கிடைக்கும். பொறுத்துக் கொள்ள வேண்டுகின்றேன்.

1) தேசிய இனப் போராட்டங்களின் வரலாற்றைக் கடந்த ஒரு நூற்றாண்டாகத் தெளிந்த புள்ளிவிவரங்களோடு அறிந்து கொள்ள நம்முன்னே பல வரலாற்றுக் குறிப்புகள் குவிந்து கிடக்கின்றன. அவற்றை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்க்கும் போது, ஒன்று தெளிவாகத் தெரிகின்றது. தேசிய இன விடுதலைப் போராட்டங்களுக்கு பூர்சுவாக்களின் ஆதரவு அடிப்படைத் தேவையாக இருந்து வந்திருக்கின்றது. இன்றைக்குத் தமிழ் பூர்சுவாக்களின் ஆதரவு கிடைக்க வாய்ப்பு இருக்கின்றதா? உலகமயமாதல், சந்தைப் பொருளாதாரம் எல்லாக் கதவுகளையும் திறந்து விட்ட நிலையில், தேசிய இனப் பூச்சுவாக்களுக்கு என்ன நெருக்கடி ஏற்பட வாய்ப்பிருக்கின்றது? இந்தியத் தேசியம் என ஏற்கெனவே கட்டமைக்கப்பட்டு சாதனை நிகழ்த்திய ஒன்றை, பி.ஜே.பி. போன்ற பெரிய கட்சிகளே புதுப்பிக்க முயன்று தோற்றுப்போய்த் தலைகுப்புறக் கவிழ்ந்து கிடக்கும் புதியச் சூழலில், தமிழ்த் தேசியத்தைக் கட்டமைப்பது, பூர்சுவாக்களின் ஆதரவைத் திரட்டுவது ஆகியன எவ்வளவு பெரிய மாபெரும் சிக்கல்களும் முயற்சிகளும் கொண்டவை என்பதை யாராவது உணர்ந்து அதற்கேற்பத் திட்டங்கள் தீட்டிச் செயல்படுகிறார்களா? எனவே, பொருளாதாரப் பின்னணி இல்லாமல் வெறுமனே முழக்கங்களை முன்வைத்துக் கொண்டிருக்கின்றோம் என்பதை ஒவ்வொருவரும் பாரதி போல நெஞ்சு வலிக்க உணர்ந்தாக வேண்டும்.

2) கொஞ்சம் பணபலம் உள்ள தமிழ் பூர்சுவாக்கள் அல்லது உலகமயமாதல் சூழலில் புதிய பணக்காரர்களாகும் தமிழ் பூர்சுவாக்கள் தங்களுடைய பொருள் முதலீட்டைப் பயன்படுத்தித் தமிழ் நிலப்பரப்பில் பெரிய பெரிய நிறுவனங்களைக் கட்டமைப்பதற்கு ஒரு சிறிதாவது முயலுகின்றார்களா? தமிழ் நிலப்பரப்பில் உள்ள பெரிய பெரிய நிறுவனங்களின் 40 விழுக்காடு பிற மொழியாளர் நிறுவனங்கள்தான். தமிழர்களின் எந்தப் புது முயற்சியிலும் தங்களது முதலீட்டைப் போடுவதற்குப் பயப்படுகின்றவர்களாக இருக்கின்றார்கள். மோட்டார் தொழிற்சாலைகளும் நெசவாலைகளும் பெரியதொரு பொருளாதார

முன்னேற்றத் திசையைக் காட்டியபோது, சென்ற நூற்றாண்டில் இந்தத் தமிழ் முதலியார்களும் செட்டியார்களும் பாதுகாப்பான வட்டிக்கடையை நடத்துவதில்தான் கருத்துச் செலுத்தினார்கள். ஒரு பிராமண முதலாளிதான் டி.வி.எஸ். தொழிற்சாலையில் தனது முதலீட்டை முதலீடு பண்ணினார். தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள்தான் சென்னையிலும் கோயமுத்தூரிலும் புதுச்சேரியிலும் தங்கள் முதலீட்டைப் புதிய திசையில் திருப்பினார்கள். எந்தப் புதியச் சூழலையும் உடனே உள்வாங்கி அதைத் தனிமைப்படுத்திக் கொள்ளும் ஆற்றலைத் தமிழர்கள் தங்களின் 300 ஆண்டுக்கால அடிமை வாழ்வின் கரணியமாக இழந்துவிட்டார்கள் என்றே சொல்லத் தோன்றுகின்றது. இங்குள்ள ஒரு சான்று சொல்கின்றேன், கேளுங்கள் – இந்திரா காந்தி காலத்தில் பாண்டிச்சேரியை ஒட்டிச் சர்வதேசிய நகரம் என்ற ஒன்றை அமைத்தல் என்ற திட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கான நிலப்பரப்பில் மைய அரசின் ஆளுகையின்கீழ் 'ஆரோவில்' பிறந்தது. இந்த ஆரோவில்லில் இங்குள்ள பெருவாரி மக்களான தமிழர்களின் கைதானே மேலோங்கியிருக்க வேண்டும்! அதுதானே சரியான பரிணாம வளர்ச்சி. ஆனால் அரவிந்தர் ஆசிரமத்தைக் காட்டி வங்காளிகள்தான் ஆரோவில்லின் அதிகார மையமாக மாறியிருக்கிறார்கள். இப்படித்தான் எல்லாவற்றையும் இழந்து போய் ஆதரவற்றவர்கள் போல நிற்கின்றார்கள் தமிழர்கள். இதே ஆரோவில், திருவனந்தபுரத்துக்கு அருகில் வந்திருந்தால் மலையாளிகள் இப்படி விடுவார்களா? இதே நிலைமைதான் ஜிப்மர் மருத்துவமனை, புதுச்சேரி மையப் பல்கலைக்கழகம் அனைத்திலும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இது ஏன்? ஒன்று, தமிழ் பூர்சுவாக்களுக்கு இன உணர்வு இல்லை. இரண்டு; தமிழ் பூர்சுவாக்கள் புதிய முயற்சியில் ஈடுபடத் திராணியற்ற கஞ்சப் பிரபுக்களாக இருக்கின்றார்கள். மூன்று, தமிழ் நிலப்பரப்பில் வாழும் பெருவாரியான பூர்சுவாக்களின் தாய்மொழி பிற மொழியாக இருக்கின்றது. தமிழ், தமிழினம் குறித்து அவர்களுக்கு எந்த அக்கறையும் கொள்ளுவதற்கான தேவையும் நெருக்கடியும் இல்லை.

3) தமிழின் ஆக்கத்திற்கு அடுத்தப் பெரும் தடையாக அமைவது அதிகார வர்க்கமாகும். மொழிவாரி மாகாணம் பிரிக்கப்பட்ட 1954 இல் இருந்து தமிழகத்தை ஆளுகின்ற அரசியல் தலைமையும், நிர்வாகத் தலைமையும் பிற மொழியாளர்களின் ஆதிக்கத்திற்குள்ளேதான் இருந்துகொண்டு வந்திருக்கின்றன. குமாரசாமி ராஜா தொடங்கி இன்று வரை தமிழகத்தை ஆளுகின்ற முதலமைச்சர்களில், பெரும்பாலோர் பிறமொழியாளர் கள்தான். இந்தக் கேடான நிலைமை வேறெந்த மாநிலத்திற்காவது உண்டா! அரசியல் தலைமைதான் இப்படி என்று இல்லை. இன்றுவரை தமிழக

அரசின் நிர்வாகத் தலைமையிலும் பிறமொழியாளர்களின் ஆதிக்கமே நிலவி வந்திருக்கின்றது. பெரியார் சமஸ்கிருதத்தைக் கொண்டாடும் பிராமணர்களின் சதவிகிதம் நிர்வாகத் தலைமையில் எந்த அளவிற்கு அதிகமாக இருக்கிறது (98%) என்பது புள்ளிவிவரம் எடுத்துக் காட்டினார். ஆனால் அதே அளவிற்குப் பெரிய பெரிய அரசு நிர்வாகத் தலைமையில் பிறமொழியாளர்கள் அதிகாரம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இதுவரை நாம் கணக்கெடுக்கவில்லை.

4) தமிழர்களின் மனவியலைக் கட்டமைப்பதில் தகவல் தொடர்பு ஊடகங்களான பத்திரிக்கை, வானொலி, திரைப்படம் முதலியவற்றிலாவது தமிழர்களின் கை மேலோங்கியதா? தமிழர்களை ஆட்டிப் படைக்கும் திரைப்படத் துறையில் படத் தயாரிப்பாளர் தொடங்கிக் குட்டிக் குட்டி நடிகைகள் வரை எல்லாம் பிறமொழியாளர்களின் கையில். சரி! சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் அப்படி ஏமாந்து விட்டோம் என்றால் இன்றைய காலகட்டத்தில் தோன்றிய தொலைக்காட்சி, கணினி, இணையம் முதலியவற்றிலும் பிராமணர்களையும் பிறமொழியாளர்களையும் தலைமை தாங்க விட்டு விட்டுத்தானே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றோம். தமிழகப் பண்பாட்டு வரலாற்றை எல்லாம் இணையத்தில் பதிவு செய்யும் தளத்தினைக்கூட, பிராமணர்கள்தான் ஆக்ரமித்துள்ளார்கள் என்று கேள்விப்படுகின்றோம். இவ்வளவு ஏன்? உலகத் தமிழர்களின் அடையாளமாக முன்னிறுத்தப்படும் சன் தொலைக்காட்சியானது தமிழர் நலம் நாடுபவர் கையில் இருக்கிறதா? இவ்வாறு தமிழுக்கு எதிரான யதார்த்தமான உண்மைகளாவது பெருவாரி மக்களைப் போய்ச் சேர்ந்திருக்கின்றனவா? இந்த மூடுண்ட உண்மைகளைப் பெருவாரி மக்களின் உள்ளம் சுடும்படி அவர்களிடம் கொண்டுபோய்ச்சேர்ப்பது தமிழ்நலம் நாடுபவர்களின் முதற்கடமை எனப்படுகின்றது.

5) விரும்புகின்றோமோ! விரும்பவில்லையோ! வரலாற்றுக் காலந்தொட்டு ஒரு சமூகத்தின் ஆதாரச் சக்தியாக நின்று இயங்கிக் கொண்டிருப்பது மதமும் மதம் சார்ந்த நிறுவனங்களுமாகும். இத்தகைய மத நிறுவனங்களிலாவது தமிழர்கள் கை ஓங்கியிருக்கிறதா? ஓங்கியிருக்கும் சங்கராச்சாரியாருக்கு எதிர் நிலையாக வளர்த்தெடுக்கப்பட்ட பங்காரு அடிகளாரின் செயல்பாடு தமிழ் நலம் சார்ந்து எங்காவது எதிலாவது வெளிப்படுகின்றதா? சங்கராச்சாரியாரின் செயல்பாடுகளை அப்பட்டமாகப் பார்த்த பிறகும் பழைய சைவ மடாதிபதிகள், பங்காரு அடிகளார் நடவடிக்கைகளில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா? சைவத்தை வளர்த்தால், தமிழை வளர்த்து விட்டதாக இன்னும் எத்தனை

நாளைக்குத்தான் இவர்கள் இப்படி இயங்கிக் கொண்டிருப்பார்கள்? தமிழ் நிலப்பரப்பிலுள்ள கோயில்களில் தமிழில் மட்டுமே வழிபாடு, தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் மட்டுமே பூசாரிகள் என்ற நிலையை எப்பொழுது ஏற்படுத்தப் போகின்றோம்? கூடவே, கிறித்தவர்களான, இசுலாமியர்களான தமிழர்கள், தமிழுக்கும் தங்களுக்கும் தொடர்பில்லாதது போல நடந்து கொள்ளும் மனவியலை எப்படி மாற்றப் போகின்றோம்?

6) எல்லாப் பொருளாதார நிபுணர்களும் (அமிர்தா சென் உட்பட) ஒரு சமூகத்தின் முகத்தை மாற்றுவதில் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்குண்டு என்பதை விடாமல் வலியுறுத்திக் கொண்டு வருகின்றார்கள். அதுவும் தாய்மொழிவழிக் கல்விதான் ஒரு மனிதனின் பன்முகப்பட்ட ஆளுமையை அதிகரிப்பதற்கான அடித்தளமாக அமையும் என்பதைக் கூறிக்கொண்டே வருகின்றார்கள். ஆனால் தமிழ்நாட்டில் நடப்பதென்னவோ? தமிழ் பயிற்றுமொழி என்பது இருக்கட்டும்; தமிழை ஒரு மொழியாகக் கூடக் கற்காமல் தமிழ்நாட்டில் ஒருவர் உயர்கல்வி வரை எல்லாத் துறையிலும் படித்து முடித்து விட முடியும் என்ற நிலைமைதான் நிலவுகின்றது. இதற்குக்கூடக் கரணியம் என்ன? கல்வி நிறுவனங்களில் பெரும்பாலானவை பிறமொழியாளர்களின் ஆதிக்கத்தில் இருப்பவைதான். அதனால்தான் ஐந்தாம் வகுப்பு வரை தமிழ்வழிக் கல்வி கட்டாயம் என்ற அரசாணை தோற்றுப் போனது. இத்துடன் நீதிபதிகளும் பிற மொழியாளர்கள் என்பதைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் தமிழ் நிலப்பரப்பில் வாழுகின்றவர்களில் தமிழ் இலக்கியத்தைப் பாடமாக எடுத்துப் படிப்பவர்கள் தான் தமிழர்கள். மற்றவர்களுக்கும் தமிழுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அவர்கள் யாரும் தமிழுக்காக அதன் நலத்திற்காக எதுவும் செய்யத் தேவையில்லை என்ற மிகக்கொடிய ஒரு மனப்பாங்கைத் தமிழர்களின் வாழ்வியலில் எங்கும் நீக்கமறப் பரப்பப்பட்டிருக்கின்றது. அதற்கேற்பப் பெரும்பாலும் தமிழ் படித்தவர்கள்தான் 'தமிழ், தமிழ்' என்று பேசிக் கொண்டிருப்பதும் ய்தார்த்தத்தில் நிலவுகிறது. இப்படி உருவாகிவிட்ட ஒரு கட்டமைப்பை உடைக்காமல் நாம் தமிழ்நலம் சார்ந்து பேசுவதில் அர்த்தமில்லையென்றே தோன்றுகின்றது.

7) சரி! என்னதான் செய்வது? தமிழுக்கும் தமிழினத்திற்கும் எழுச்சி என்பதே இல்லையா? இன்றைய சூழலில் ஒரே நம்பிக்கை ஒளியாக எனக்குப் படுவது விடுதலைச் சிறுத்தைகளின் செயலாளர் திருமாவளவனின் தமிழ்த் தேசியச் சொல்லாடல்தான். தமிழர்கள் நான்கு பேர் இருந்தால், அவர்களில் ஒருவராக நிற்கும் தலித்துகளின் அரசியல் தலைமையை ஏற்று

இருக்கும் திருமாவளவனின் தமிழ்த் தேசியம் சார்ந்த நடவடிக்கைகள் நம்பிக்கையளிப்பதாக இருக்கின்றன. தமிழர்கள் உருப்பட மதம் மாற்றம் வேண்டாம். பெயர் மாற்றம் வேண்டாம். தூய தமிழ்ப் பெயர் மாற்றம் வேண்டும் என்ற அவருடைய முழக்கம் 'எல்லாமே பெயரில்தான் இருக்கின்றது' என்ற அடிப்படை உண்மையை முன்னெடுத்துச் செல்கின்றது. எல்லா உயர் சாதித் தமிழர்களும் தங்களின் சாதியுணர்வினை உதிர்த்துவிட்டு திருமாவளவனின் தலைமையின்கீழ் ஒன்று திரளுவதைத் தவிர, தமிழ் நலம் காக்க இன்றைய உலகமயமாதல் சூழலில் வேறு வழியேதும் இருப்பதாக இப்போதைக்குத் தென்படவில்லை. பிற்படுத்தப்பட்டவர்களும், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களும், தலித்துகளும் தமிழுக்காக ஒன்றிணைந்து செயல்பட முனைகிற அடையாளங்கள் அங்கங்கே தென்படுகின்றன. அந்த அடையாளங்கள்தான் இப்பொழுது எனக்கான நம்பிக்கை அடையாளங்களாகத் தோன்றுகின்றன. இந்த அடையாளங்கள்தான் பழைய தி.மு.க. அடையாளங்களோடு தேங்கிப்போன பழையவர்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டுப் புதிய சூழலுக்கேற்ற, புதிய இளைஞர்களை வென்றெடுக்கும் என்ற நம்பிக்கைதான் என்னுடைய இந்த எழுத்து முறைக்கு ஆதாரமாக நின்று இயக்கியுள்ளது.

செங்கோடன்

தமிழ் செம்மொழியாக மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. செம்மொழி என்ற அறிவிப்பு மட்டுமே தமிழின் வளர்ச்சிக்கு வழி வகுத்திடும் என்று நம்பினால் அது பகற்கனவாகத்தான் முடியும். "தமிழின் வளர்ச்சிக்குத் தடைகளாய் இருப்பவை யாவை?" என ஆய்வதன் மூலமே அவற்றைக் கடந்து செல்வதற்கான வழிகளைக் காண முடியும்.

1. 1950 களின் இறுதியில் தமிழ்நாட்டில் தமிழைப் பயிற்று மொழியாக தொடக்கப் பள்ளி முதல் உயர்கல்வி முடியும் வரை கொண்டு வரப்பட வேண்டும் என்ற முயற்சி தொடங்கப்பட்டது. தமிழைப் பற்றி அதிகம் வெளியில் பேசாத காங்கிரசு ஆட்சியில் இது தொடங்கப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகு வந்த கழகங்களின் ஆட்சியில் அது கைவிடப்பட்டது. தமிழ் அவர்களுக்குப் பதவிக்கு முந்தி தேவையாய் இருந்தது. ஆனால் உண்மையில் அவர்கள் ஆங்கில மோகத்தில் இருந்தனர். அதனால் அவர்கள் ஆட்சியில் ஆங்கிலப் பள்ளிகள் புற்றீசல்களைப் போலத் தமிழகம் எங்கும் முளைத்துள்ளன. இவற்றிற்கு முடிவு கட்டி பயிற்று மொழியாக உயர்கல்வி வரை தமிழ்தான் தமிழகத்தில் இருக்க வேண்டும் என்ற கட்டாய நிலை உருவாக்கப்பட வேண்டும்.

2. ஆங்கிலப் பயிற்று மொழி என்ற நிலையிலிருந்து அகற்றப்பட வேண்டும். அதன் மூலம் ஆங்கில மோகம் களையப்படும். கல்வி வணிகமயமாதல் தடுக்கப்படும்.

3. ஆங்கிலம் அறிந்தவர்கள்தான் அறிவாளிகள் என்ற தவறான கருத்துக் களையப்பட வேண்டும். ஆங்கில மோகத்திற்கு எதிரான பண்பாட்டு இயக்கம் நடத்தப்பட வேண்டும். ஆங்கிலச் சொற்களைக் கலந்து பேசும் பழக்கம் ஒழிக்கப்பட வேண்டும். ஆங்கிலம் மூலம் தமிழுக்கு வரும் பெயர்ச் சொற்களைத் தமிழ்ப்படுத்த இயலாதபோது அவ்வாறே பயன்படுத்தலாம். ஆனால் ஆங்கில வினைச் சொற்களை அப்படியே பயன்படுத்துவது களையப்பட வேண்டும். மக்கள் தொடர்புச் சாதனங்களில் ஆங்கில ஆளுமை அகற்றப்படவேண்டும்.

4. ஆங்கிலத்தை ஒரு மொழியாகக் கற்க வாய்ப்பளிக்கலாம். ஆங்கிலத்தை மட்டும் அல்லாமல் கன்னடம், தெலுங்கு, இந்தி போன்ற பிற மாநில மொழிகளையும் பிரஞ்சு, ஜெர்மன், சீனம் போன்ற பிற நாட்டு மொழிகளையும் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மொழிப் பாடங்களாகக் கற்க வசதிகள் ஏற்படுத்தித் தரலாம். அதன் மூலம் ஆங்கிலத்தின் ஆதிக்கம் ஒழிக்கப்படும்.

5. தமிழ் மாநிலம் உருவாகி ஐம்பதாண்டுகள் ஆகியும் தமிழ்நாட்டில் இன்னும் தமிழ் முழுமையான ஆட்சி மொழியாக, அலுவலக மொழியாக மாறவில்லை. தமிழ் வளர்ச்சித்துறை என்ற துறை இருந்தும் அதன் செயல்பாடு சடங்குத் தளமாகவே உள்ளது. வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து தலைமைச் செயலகம் வரை ஆங்கிலம்தான் அலுவலக மொழியாக உள்ளது. தமிழ் மொழி அலுவலக மொழியாக மாறாமல் இருப்பதற்குக் காரணம் இங்குள்ள ஆட்சியில் உள்ள கட்சிகளும், தலைமை தாங்கி நடத்தி வரும் அதிகாரவர்க்கமுமதான். இதன் காரணமாக, தமிழக அரசின் அலுவலகங்களுக்குச் செல்லும் எந்த ஒரு குடிமகனும் தன்னை ஓர் இரண்டாம்தரக் குடிமகனாகக் கருதவேண்டிய இழிநிலைதான் நிலவுகிறது. ஏனெனில் ஆங்கிலத்தில் சில சொற்களாவது பேசினால்தான் அவர்கள் மதிக்கப்படுகிறார்கள். இந்த இழிநிலை போக்கப்பட வேண்டுமானால் தலைமைச் செயலகம் முதல் வட்டாட்சியர் அலுவலகம் வரை தமிழ்நாட்டில் தமிழ்தான் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற கட்டாய நிலை உருவாக்கப்பட வேண்டும்.

6. அதேபோல நீதிமன்ற மொழியாக, உயர்நீதிமன்றம் உட்பட அனைத்து நீதி மன்றங்களிலும் தமிழ்தான் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நிலை உருவாக்கப்பட வேண்டும்.

7. வழிபாட்டு மொழியாகத் தமிழ்தான் இருக்கமுடியும் என்ற நிலை உருவாக்கப்பட வேண்டும்.

8. தமிழைப் பயிற்று மொழியாகவும், அலுவலக மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும், வழிபாட்டு மொழியாகவும் மாற்ற நடுவண் அரசோ, இந்தி ஆதிக்கமோ தடையாய் இல்லை. இங்குள்ள ஆட்சியாளர்களின் ஆங்கில மோகமே தடையாய் உள்ளது. இதைக் களைவதன் மூலமே தமிழ் மொழியின் வளர்ச்சி சாத்தியமாகும்.

9. ஆங்கில ஆதிக்கம் தொடர்ந்து இங்கு நீடிக்கக் கரணியம் பன்னாட்டு முதலீடுகளின் ஆதிக்கம் இங்கு தொடர்ந்து இருப்பதுதான். இன்று உலகமயமாதல் பெயரில் மறுகாலணியாதிக்கம் உருவாக்கப்பட்டு வருகிறது. ஏகாதிபத்திய முதலாளிகள் இங்குள்ள முதலாளிகளை இளநிலைப் பங்குதாரர்களாகக் கொண்டு தங்களுடைய பொருளாதாரச் சுரண்டலை ஆழப்படுத்தி வருகின்றனர். இங்குள்ள ஒரு பகுதியினர் இவர்களுக்குத் தரகர்களாகச் செயல்பட்டு வருகின்றனர். இந்தப் பன்னாட்டு முதலீடுகளின் நிறுவனங்களுக்கு ஆங்கிலம் அறிந்தப் பணியாளர்கள் தேவை. அவர்களை உற்பத்தி செய்து தரும் உற்பத்தி சாலைகளாக இங்குள்ள கல்விச் சட்டங்கள் நிலவுகின்றன. இங்குள்ள கல்வி வணிகர்கள் இச்சூழலைப் பயன்படுத்திக் கொண்டு கல்வி வணிகம் செய்து வருகின்றனர். அதனால் ஆங்கில மோகம் குறையாமல் இங்கு நீடித்து வருகின்றது. அதனால் தமிழின் வளர்ச்சியும், தமிழை மட்டும் அறிந்த மக்களின் வளர்ச்சியும் தடுக்கப்பட்டு வருகின்றது. இந்தப் பன்னாட்டு முதலீடுகளின் சுரண்டலுக்கும் அதற்குக் காவல்களாக இருக்கும் ஆட்சியாளர்களுக்கும் முடிவு கட்டுவதன் மூலமே முழுமையான தமிழின் வளர்ச்சியும், தமிழ் மக்களின் வளர்ச்சியும் சாத்தியமாகும்.

இருப்பதைவிட இறப்பதே நன்று

வாணிகர்க்கும் தமிழென்றால்
வெறுப்புண்டோ? அரசியல்சீர்
வாய்க்கப் பெற்றோர்

ஆணிகர்த்த பேடிகளே?
அரும்புலவர் ஊமைகளோ?
இல்ல றத்தைப்

பேணுமற்ற யாவருமே
உணர்வற்றுப் போனாரோ?
பெருவாழ் வுக்கோர்

ஏணிபெற்றும் ஏறாத
தமிழர் உயிர் வாழ்வதிலும்
இறத்தல் நன்றே.

- பாவேந்தர் பாரதிதாசன்

ம.இலெ. தங்கப்பா

1. தமிழே தமிழ்நாட்டின் ஆட்சி மொழி என்று சட்டம் இயற்றப் பட்டிருந்தும், அச்சட்டம் முழுதுமாய் நடைமுறைப்படுத்தப்படாமையும், கல்வி நிலையங்களில் தமிழ் நூற்றுக்கு நூறு பயிற்று மொழி ஆகாமையும்.

2. கீழ்மட்டத்திலிருந்து மேல்மட்டம் வரை வாணிகர்களாலும், சுரண்டல்காரர்களாலும் சூழ்ச்சிக் காரர்களாலும் நடத்தப்படும் ஆங்கில வழிப் பள்ளிகள், கல்லூரிகளின் வல்லாண்மையும் மேலாண்மையும்.

3. தமிழ்நாட்டுப் பள்ளிகளில் பயிலும் எல்லா மாணவர்களும் தமிழ் கட்டாயம் படித்தேத் தீர வேண்டும் என்று சட்டம் செய்யாமை.

4. தமிழகத்தில் கால்ஊன்றிக் கொண்டிருக்கும் பிறமொழியாளரிடம் தமிழர் ஏமாறுந்தன்மை.

5. தமிழ்நாட்டின் உயர்நிலை அதிகாரிகளும் அலுவலர்களுமான இந்திய ஆட்சிப் பணி (I.A.S.) அதிகாரிகள் பலர் தமிழர் அல்லாதவர்களாகவும், தமிழுக்குரிய இடத்தினை ஆட்சியிலும் கல்வியிலும் வழங்குவது பற்றிக் கடுகளவும் அக்கறையற்ற ஆங்கில அடிமைகளாகவும், தமிழ்ப் பகைவர்களாகவும் இருத்தல்.

6. கடந்த பல ஆண்டுகளாகத் தமிழ்நாட்டை ஆண்டு வந்த, ஆண்டு கொண்டிருக்கும் ஆட்சியாளர்கள் வாழ்வியர் பற்றியோ, கல்வி பற்றியோ தமிழ்நாட்டில் தமிழ் தனக்குரிய இடத்தினைப் பெறுவதன் இன்றியமையாமை பற்றியோ கடுகளவும் அக்கறையற்றவர்களாகவும், தெளிவற்றவர்களாகவும் இருந்து கொண்டு உண்மைத் தமிழ் மலர்ச்சிக்கு எல்லா வகையிலும் எல்லா நிலையிலும் முட்டுக்கட்டைகளாகக் குறுக்கே நின்று கொண்டிருத்தல்.

7. தமிழுணர்வுடையராயிருந்து தமிழ் நலத்துக்குப் பாடுபடும் மிகச் சிறுபான்மையரைத் தவிர்த்து, மிகமிகப் பெரும்பான்மையரான – படித்த கும்பல் உட்பட்ட – தமிழ்ப்பொது மக்களிடம் கடுகளவு கூட இனவுணர்வோ மொழியுணர்வோ, சரியான வாழ்வியல், கல்வி பற்றிய தெளிவோ இல்லாதிருக்கும் பேரவலம்.

8. தமிழுணர்வுடையராயிருந்து, பல நிலைகளிலும் தமிழ்நலம், உரிமை கருதிப் பணி புரிந்தும் பாடுபட்டும் வரும் பல்வேறு குழுவினரும் முழுதுமாய் ஒன்று திரண்டும், மக்களை ஒன்று கூட்டியும் போராடாமல் அடையாளப் போராட்டங்களோடும் அரைகுறைப் போராட்டங்களோடும் நின்றுவிடுதல்.

சுருங்கக் கூறின், நமக்குப் போதிய வலிமையின்மையும், நமக்குள் ஒற்றுமையின்மையும் நமக்குப் பெரிய தடைகள் என்று கூறலாம்.

இத்தடைகளைக் கடப்பதற்கான வழிகள்

1. வழக்குமன்றங்கள் உட்படத் தமிழே நூற்றுக்கு நூறு ஆட்சி மொழியாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.
2. தமிழே தமிழ்நாட்டின் எல்லாக் கல்விநிலையங்களிலும் பயிற்று மொழியாக வேண்டும்.
3. ஆங்கில வழிப் பள்ளிகள் முழுதுமாய் ஒழிக்கப்பட வேண்டும். அல்லது அதிகார நிலையில் எல்லாம் கல்வி நிலையங்களிலும் தமிழையே நூற்றுக்கு நூறு பயிற்று மொழியாக்கி விட்டுத் தமிழைப் பயிற்று மொழியாகக் கொள்பவர்கட்கு நூற்றுக்கு நூறு எல்லாக் கல்வி வாயில்களையும் திறந்துவிட்டு, அவர்கள் உரிமையிலும் வாய்ப்புகளிலும் கடுகளவு கூடக் குறுக்கிடாத வண்ணம், மேல்நிலைப் பள்ளிகள் வரை அயல்மொழி எதையும் பயிற்று மொழியாகக் கொள்ள இடம் கொடாமல், அதற்குமேல், விரும்புவோர்க்கு மட்டுமே ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புகளை ஒதுக்கிக் கொடுக்கலாம்.
4. உயர்நிலை அதிகாரிகள், இந்திய ஆட்சிப் பணியினர் தமிழை ஆட்சி மொழியாக நடைமுறைப்படுத்துபவராக இருந்தாலன்றி அவர்களைப் பணியில் அமர்த்துதல் கூடாது.
5. தமிழ்நாட்டின் ஆட்சியாளர் தமிழ் நலத்துக்குரிய ஆக்கவினைகளை மேற்கொள்ளுமாறு அவர்களை வற்புறுத்திப் பணியச் செய்யுமளவுக்கு வலிமையும் எழுச்சியும் மிக்க மக்கள் போராட்டங்களைத் தமிழுணர்வாளர் ஒன்று கூடி நடத்தல் வேண்டும். கோரிக்கைகள் நிறைவேறும் வரைப் போராட்டங்கள் தொடர வேண்டும்.

மங்கையர் முதியோர் எழுக!

ஒருவானில் பன்னிலவாய்
உயர்தமிழ்ப் பெண்களெலாம்
எழுக! உங்கள்

திருவான செந்தமிழின்
சிறுமையினைத் தீர்ப்பதென
எழுக! நீவிர்,

பெருமானம் காப்பதற்கு
வாரீரேல் உங்கள் நுதற்
பிழையே நாணும்!

மருமலர்வாய்த் தாமரையும்
கனியுதடும், நன்னெஞ்சும்
வாட்டம் எய்தும்!

– *பாவேந்தர் பாரதிதாசன்*

பேராசிரியர் தி. முருகரத்தினம்

1. தமிழின் ஆக்கமான வளர்ச்சிக்கு முதற்பெரும் தடையாக விளங்குவது தமிழகத்துக் கல்வி நிறுவனங்களாகிய பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், ஆய்வு நிறுவனங்கள் ஆகியவற்றில் தமிழ், பாட மொழியாகவும் கற்பிக்கும் மொழியாகவும், ஆய்வு மொழியாகவும் கொள்ளப்படாது தேயாகும். பெரும்பான்மையான அறிவுத் துறைகளையும், கல்வித் துறைகளையும் நாம் மேலை நாடுகளிலிருந்து பெறுவதே இதற்கு ஒரு கரணியம். நீண்ட நெடுங்காலமாக உலகியல் சார்ந்த அறிவியல் ஆராய்ச்சிகளில் நம் நாடு பின்தங்கியிருந்ததும் இதற்குக் கரணியம். ஜப்பான், சீனா போன்று கடும் முயற்சிகளை மேற்கொண்டு இக்குறைகளைக் களைந்து நிறை கண்டு தமிழைக் காத்தல் வேண்டும். மேற்கண்ட கல்வித் துறைகளில் தமிழாக்கத்தில் அக்கறையும் பொறுப்புணர்வும் ஈடுபாடும் கொண்ட அறிவு மக்கள் இல்லாமலிருப்பதும் ஒரு குறையாகும். அவர்களுக்கு இத்தகைய உணர்வினை ஊட்டுதல் சமூகம், அரசு ஆகியவற்றின் கடமையாகும். இவற்றுக்கும் அவ்வுணர்வு தேவையே. இவையும் உணர்வற்றவைதான். இப்பாங்கில் சீனா, ஜப்பான் பின்பற்றத்தக்க சான்றுகளாகம்.

இத்தடையோடு தொடர்புடையது மற்றொன்றும் ஆகும். அரசின் ஆட்சி (நிர்வாகம்) மாபெரும் அமைப்பு. நாடு முழுவதும் பரவியது; சமூகம் முழுவதும் தாக்குவது; வரலாறு படைப்பது; சமூகத்தின் அனைத்துத் துறைகளிலும் ஆட்சி செய்வது, இவ்வாறே நீதித்துறையுமாகும். அரசின் ஆட்சியிலும் நீதித்துறையிலும் தமிழ் இடம் பெறுமானால் - கோலோச்சுமானால் - தமிழுக்கு வாய்ப்புண்டு; ஆக்கமுண்டு. தமிழில் கட்சி நடைபெறுகின்ற வரையில் தமிழ் வாழும். இதற்கும் தமிழ் மனம் படைத்தோர் ஆட்சியில் அமரவேண்டும். அத்தகையோரை மக்கள் ஆட்சியில் அமர்த்துதல் வேண்டும்.

இவ்வாறான அனைத்துத் துறைகளிலும் தமிழ் இடம்பெறச் சொல்வளம் கொண்டதுதான் தமிழ்.

2. தமிழகம் முழுவதும் படித்தோர் கூட்டம் ஆங்கிலத்தைப் பயன்படுத்துகின்றார்கள்; பலர் தமிழ் கலந்த அரைகுறை ஆங்கிலத்தைப் பயன்படுத்துகின்றார்கள்; எழுத்தும் கூட அவ்வாறு மாறி வருகின்றது. இது தமிழின் ஆக்கமல்ல. ஊடகங்களாகிய செய்தித்தாள்கள், வானொலி, தொலைக்காட்சி ஆகியவையும் இக்கலவைத் தமிழை நோக்கிச் செல்கின்றன. நமக்கு ஆங்கிலம் வேண்டுமா? தமிழ் வேண்டுமா? தமிங்கிலம் வேண்டுமா? என்ற வினா ஒலித்துக் கொண்டேயிருக்கின்றது. தமிழ் ஆக்கத்திற்கு இவை தடைகள். தமிங்கிலம் பரவுவதற்கு மேல்நிலையாக்கம் - மேற்குடி

மக்களைக் கீழ்க்குடி மக்கள் பின்பற்றித் தம்மை உயர்த்தும் முயற்சி – ஒரு பெருங் கரணியம். மேற்குடி மக்களின் – ஆட்சியாளர், ஆசிரியர்மார், பெரு நிறுவனத்தார் – தமிழ் உணர்வின்றித் தமிங்கிலம் பேசுகிறார்கள். தமிங்கிலத்திற்குத் தேவையில்லை. தமிழ் உணர்வும் பொறுப்புணர்வும் தமிழ் வளர்ச்சியில் அக்கறையும் மேற்குடி மக்களுக்குத் தேவை. இதற்கான சூழ்நிலைகளைத் தமிழ் அரசும் சமூகமும் நிறுவுதல் வேண்டும்.

ஊடகங்கள், வணிக நிறுவனங்களே. தமிங்கிலம் செல்படியாகும் எனக் கருதுகின்றன. மேற்க்குடி மக்களைத் திருத்தித் தமிங்கிலத்தை விரட்டித் தமிழைக் காக்கலாம்.

இன்று வையமயமாகும் போக்கில் ஆங்கிலத்தைப் புறக்கணித்தல் இயலாது. Modern English எனப்படும் இன்றைய ஆங்கிலத்தில் வெளிவரும் ஒரு உரைநடை நூலை, அறிவியல் நூலை, நுண்வினை (Technical) நூலைப் படித்தும் புரிந்து கொள்ளக் கூடிய நிலையில் – அனைத்துத் தமிழருக்கு இல்லாமல் போனாலும் – பெரும்பான்மையான தமிழருக்கு ஆங்கில அறிவு வழங்குமாறு நம் கல்வித் திட்டத்தை அமைக்கலாம்.

மேலை நாடு சென்று மேல்நிலை அடைய விரும்பும் சிறு தொகையினரான தமிழருக்குள் பெருந்தொகையினரான மக்கள் சுமை தாங்க வேண்டியதில்லை.

3. தமிழின் ஆக்கத்திற்கு மற்றொரு தடை தமிழின் சிறப்பினைத் தமிழரே உணர்ந்து போற்றாமை தமிழகத்திலே சமய வாழ்க்கையில் தமிழுக்கு இடமில்லை. கோவிலுக்குள் தமிழுக்கு இடமில்லை. பார்ப்பனரும் அவர் பயன்படுத்தும் சமஸ்கிருதமும் புனிதமுடைய சமய மொழியாகக் கருதப்படுகின்றன. 97 விழுக்காட்டினரான தமிழர் தீண்டாதோர்; அவர்கள் பேசும் மொழி தீட்டுடையது. தமிழகத்து மேற்குடி மக்களின் சமயமெல்லாம் – சைவம், வைணவம், சாக்தம் – சமஸ்கிருதமாயின. தமிழகத்தில் எண்ணற்ற தெய்வங்கள் உண்டு. அவற்றின் பெயர்கள் சமஸ்கிருதப் பெயர்கள். அவற்றை இட்டுக் கொள்ளும் தமிழர்கள் பெயர்கள் எல்லாம் சமஸ்கிருதப் பெயர்கள். தமிழர் சமய வாழ்வில் சமஸ்கிருதத்தை வீழ்த்தினால் ஒழியத் தமிழுக்கு மீட்சியில்லை, பெருமையில்லை. தமிழ், தன் தன்மானம் இழந்து நிற்கின்றது. இத்தடை நீங்க அரசும் நிறுவனங்களும் பொறுப்பல்ல; தமிழ்ச் சமூகமே பொறுப்பு.

சமயச் சிந்தனைகள், விழாக்கள், பணிகள் எனக்கருதிச் சமூக மூடநம்பிக்கைகளை ஊடகங்கள் வளர்க்கின்றன. அவை சமஸ்கிருத மயம். தமிழகத்தில் பண்பாட்டுப் புரட்சி ஏற்பட வேண்டும்.

“மானமிழந்து மதிகெட்டுப போனபின் தமிழர் வாழாமை முன் இனிது”.

தமிழ்ப் பெரியசாமி

தொன்மையும் வண்மையும் மிக்கத் தமிழ்மொழி நமது தாய்மொழி என்பதில் நாம் பெருமைப் படலாம். ஆயிரக்கணக்கான மொழிகள் உலக வழக்கிலிருக்க, கிரேக்கம், இலத்தீன், ஈப்ரூ, வடமொழி, தமிழ், சீனம் ஆகிய ஆறு மட்டும் செவ்வியல் மொழியென உலக மொழியியல் அறிகுறிகள் சுட்டிக் காட்டுகின்றார்கள். அவ்வாறனுள் நம் தமிழ் இடம்பெற்றிருப்பது, நமக்கு மேலும் பெருமையூட்டுகின்றது.

உலகோர் கொண்டாடும் தமிழ், உரிய இடத்தில் மாண்பிழந்து, தகுதியை இழந்து நிற்பதை எண்ணிப் பார்க்க மனம் நோகின்றது. நூற்றாண்டு காலக் கோரிக்கைக்குத் தற்போது வெற்றி கிடைத்திருப்பது போல, நடுவணரசு தமிழைச் செம்மொழியாக அறிவித்துள்ளது.

ஆனால், மிக நுணுக்கமாக ஆய்ந்து பார்த்தால் தமிழ், சொந்த மண்ணில் கூட, விடுதலையுணர்வோடு நிற்க முடியாத நிலை உள்ளது. அரசு இயந்திரங்களிலும் சமூகப் பண்பாட்டிலும் ஆங்கிலம் கொஞ்சம் கொஞ்சமாகப் பெரும் இடத்தை அடைத்துக் கொண்டுள்ளது.

பொருளாதார வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட வகையில் மக்கள் சமநிலை காண விழைகின்றனர். இது சரியெனினும், தமது தொன்மையைத் தள்ளிவைத்து விட்டு, ஆடம்பரப் போக்கில் செல்லத் துணிந்து விட்டனர். அவர்கள் தம் தாய் மொழியை விடுத்து, ஆங்கிலம் போன்ற மொழிகளைப் பற்றி நிற்கின்றனர். உலகமயமாக்கலில் எளிமையானவர்களும் கரையத் தொடங்கி விட்டனர்.

1. இன்றைய நடைமுறை வாழ்க்கையில், மக்கள் கல்வித் தளத்தில் தாய்மொழியைப் புறக்கணித்து வருகின்றனர். ஆங்கிலப் பள்ளிகள் வணிகத் தலங்களாக இருந்த போதும், மக்கள் மாயை நோக்கில் அதன் பக்கமாகவே சாய்கின்றார்கள். தமிழகத்தில் பயிற்றுமொழியாகத் தமிழே இருக்க வேண்டும் என்பதில் உறுதியில்லாத மாநில அரசு, ஆங்கிலப் பள்ளிகளுக்கு அனுமதி வழங்கி, அடியெடுத்துக் கொடுத்துவிட்டது. அதன் விளைவு, இன்று திரும்பிய திசையெல்லாம் ஆங்கிலப் பள்ளிகளாக உள்ளன.

   தமிழகத்தின் அனைத்து வணிகப் பள்ளிகளிலும் 1 முதல் 5 வகுப்பு வரையிலானத் தொடக்க நிலை வகுப்புகளிலாவது, கட்டாயமாகத் தமிழிலேயே கற்பிக்க வேண்டும். இதனைச் செயற்படுத்த, மாநில அரசு சட்டவகைப்பட்ட ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும்.

2. தமிழ்நாட்டில் உள்ள தொழிற்கல்வி சாராத, பிற பல்கலைக் கழகங்களில் வணிகவியல், சிறப்பு அறிவியல் எனப் பாகுபாடின்றி, எவ்வகைப்பட்ட வகுப்பாளனாயினும் முதலிரண்டு ஆண்டுகளில் தமிழ்மொழிப் பாடமாக அமைதல் அவசியமாகும். வாழ்வியல்

கருத்துகளை உணரும் பருவத்து, தாய்மொழிப் பாடத்தைத் தவிர்ப்பது சமுதாயச் செம்மையின் அடிப்படையைத் தகர்ப்பதாகும்.

3. தொழிற் கல்லூரிகளுக்கும் தமிழுக்கும் தொடர்பில்லாத நிலை உள்ளது. பொறியியல் கல்லூரிகளில் தமிழ்வழிக் கற்பித்தலை நடைமுறைப் படுத்த வேண்டும். அத்துடன் அவ்வகையில் பயில்வோர்கட்கு முழுமையான வேலை வாய்ப்பு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

4. அறிவியல், கணிதம் போன்ற பள்ளிப் பாட நூல்களில் ஒரே மாதிரியானத் தரப்படுத்தப்பட்டக் கலைச் சொற்களைப் பயன்படுத்துவதில்லை. எழுதுவோர், அவரவர் படித்த, கேட்டறிந்த சொற்களையே பயன்படுத்துகின்றனர். இதனால் ஏற்படும் குழப்பத்தைப் போக்க, பள்ளிக் கல்வித்துறை மூலமாக, பாடங்களுக்கேற்ப, கலைச் சொல்லாக்கப் பட்டியல் உருவாக்கப்பட வேண்டும்.

5. அரசின் செயல்முறைகளை வெளிக் கொண்டுவரும் அரசாணைகள் முழுவதுமாகத் தமிழில் வெளியிடப்பட வேண்டும். நடுவணரசுத் தொடர்புடைய ஆணைகளாயின், அவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்பைப் பயன்படுத்த வேண்டும். மாநில அரசின் ஆட்சிமொழி தமிழாயிருக்க, ஆங்கிலத்தில் அரசாணை வெளியிடுவது ஆட்சிமொழித் திட்டத்திற்கு முரணானதாகும்.

6. தற்போது அரசு அலுவலக நடவடிக்கைகள் முற்றிலும் தமிழிலேயே நடைபெற்று வருவதாகக் கூறமுடியாது. 1956இல் ஆட்சி மொழிச் சட்டம் கொண்டு வரப்பட்டது. நீண்டகால இடைவெளிக்குப் பிறகும் கூட, இத்திட்டம் முழுமையாகச் செயல்படவில்லை. இந்நிலை மாற வேண்டும். அனைத்துக் கடிதப் போக்குவரத்தும் தமிழிலேயே இருக்க வேண்டியதைக் கட்டாயமாக்க வேண்டும். தேவைப்படுமிடங்களில் ஆங்கில மொழி பெயர்ப்புகளைப் பயன்படுத்தலாம்.

7. வணிக நிலையங்களில் தமிழில் பெயர்ப் பலகை வைக்கப்பட வேண்டும் என்பதை அரசாணைகள் வலியுறுத்துகின்றன. அது தற்போது புதுவேகப்படுத்தப்பட்டுள்ளது.

   வணிக நிலையங்களின் பெயர்கள் எதுவாயினும் அதைத் தமிழில் மொழி பெயர்க்காமல், தமிழ் எழுத்துகளால் எழுதலாம். 'Globe Agency' என்பதை 'குளோப் முகவாண்மையகம்' என்று எழுதலாம். இதற்கு வழிகாட்டும் வகையில், தமிழ் வளர்ச்சித் துறை வெளியிட்டுள்ள பெயராக்கப் பட்டியலைப் பயன்படுத்தலாம்.

8. சமுதாயத்தை இறுகப் பற்றியுள்ளவைகளில் திரைப்படத் துறை முதன்மையானது. இது நேரடியாக இல்லாது, தமிழின, பண்பாட்டுச் சீரழிவைப் பேரளவில் உண்டாக்குகின்றது. நடுவணரசின் தணிக்கைக் குழுவினரின் கட்டுப்பாட்டு விதிமுறைகளோடு, மாநில அரசின்

மொழி, இனம் சார்ந்த சட்ட நெறிகளையும் இணைத்துச் செயல்படுத்த வேண்டும்.

9. தமிழ்மொழி வளர்ச்சிக்கெனத் தனி அமைச்சரகம் அமைப்பதில் தவறேதுமில்லை. ஏனெனில் பரந்துபட்ட இலக்கிய, பண்பாட்டு வகைகளை உள் நாட்டிலும், பிறநாடுகளிலும் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டியுள்ளது. இதற்கென அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் புலமையாளர்களைக் கொண்ட குழு, அமைச்சரகத்தோடு இணைந்து செயலாற்ற வேண்டும்.

10. ஒப்பிலக்கிய ஆய்வுகள் தற்காலத்தில் அருகி வருகின்றன. தமிழகப் பல்கலைக்கழக ஆய்வு இருக்கைகள் பெரும்பாலும் திராவிட மொழிகள் இந்தோ-ஆரிய மொழிகளைக் கடந்து செல்லத் துணிவதில்லை. பிறநாட்டு இலக்கியங்களோடு தமிழும் கைகோர்த்துச் செல்லும் நாளே, தெருவெங்கும் தமிழ் முழக்கமிடும் நாளாகும்.

11. மொழிவாரி மாநில அமைப்பு அரசியல் முதன்மைத்தன்மை வாய்ந்த நிகழ்ச்சியாகும். தமிழ்நாடு உருவான நவம்பர் திங்களை, மாநில அரசு 'தமிழ்நாடு நாளாக'க் கொண்டாட வேண்டும். பிற மாநிலங்கள் தத்தம் மாநில நாளைச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றன.

பாராட்டுவதும், அதைக்கேட்டு மகிழ்வதும் மட்டும் வளர்ச்சியாகாது. தாழ்விலும் தளர்ச்சியிலும் எழுச்சிபெற்று, கடமைகளைத் தொடர்ந்து செய்வதே வென்றெடுக்கும் வழியாகும்.

ஞானி

1. ஆங்கிலேயர் உட்பட மேற்கத்தியரின்; அரசியல், பொருளியல் ஆளுமையிலிருந்து விடுதலை பெறும் முறையில் இந்தியாவின் விடுதலைப் போராட்டம் சரிவர திட்டமிட்டு நடத்தப்பெறவில்லை. இன்றைய நிலையில் அமெரிக்கரின் ஆளுமையும் சேர்ந்திருக்கின்றது. உலகமயமாதல் என்ற பெயரில் இன்று தமிழக மக்கள் மீதும், தமிழக அரசியல் கட்சிகள் ஒத்துழைப்போடு இந்த ஆளுமை எல்லாக் காலங்களிலும் தீவிரம் பெற்றுள்ளது. மேற்கத்தியரின் ஆளுமையோடு இங்குள்ள முதலாளிய ஆற்றல்கள் பெரும் அளவில் ஒத்துழைக்கின்றன. அறிவியல், தொழில்நுட்பம் என்ற வடிவத்திலும் நடைபெறுவது இந்த ஆளுமை தான். இவ்வகை ஆளுமைகளிலிருந்து விடுதலை பெறுவது பற்றி நம்மவர் சிந்தனை இன்னும் செல்வதில்லை. ஆங்கில மொழியின் ஆளுமை தனித்து இங்கு செயல்படுவது இல்லை. இத்தகைய சூழலில்தான் தமிழ் இங்கு ஓரத்திற்கு ஒதுக்கப்படுகின்றது. ஆங்கில மொழி என்ற வணிகம் இங்கு தீவிரமாக செயல்படுவதும் இந்த அடிப்படையில்தான்.

2. தமிழ் மொழியின் தொன்மை, மேன்மை, இலக்கிய, இலக்கண வளம் முதலியவை குறித்து நாம் பெருமைப்படுகின்றோம். தற்பெருமை கொள்கின்றோம். தமிழினத்தின் தொன்மை குறித்தும் புதிய ஆய்வுகள் நம் இன உணர்வை மிகுதிபடுத்துகின்றன. உலக அளவில் நம் இனத்தின் முதன்மை குறித்தும் நாம் பெருமைப்படுகின்றோம். தற்பெருமை உணர்வு நம் தகுதியை உயர்த்துவதற்கு மாறாக நம் வலுவை குறைக்கின்றது. உலக வரலாற்றின் இயக்கப் போக்கிலிருந்து நம்மைத் தனிமைப்படுத்துகின்றது. உலக வரலாற்று இயக்கத்தை நாம் உள்வாங்கிக் கொள்ளவில்லை. சமதர்மம் முதலிய உணர்வுகள் நம்மவர்க்கு கசக்கின்றன. வெற்றுத் தமிழ்ப் பெருமை, இனப்பெருமை நம்மை இன்று காப்பாற்ற முடியாது.

3. தமிழ்ப்பற்று என்பது தமிழ் நிலத்தின் மீது, தமிழ் மக்கள் மீது, தமிழ் வரலாற்றின் மீது, தமிழ் கல்வியின் மீது, தமிழ் மருத்துவத்தின் மீது, தமிழ் மரபின் மீது, உண்மையான பற்றாக நம்மால் புரிந்து கொள்ளப்படவில்லை. வடவரை நாம் காய்கிற அளவுக்கு, மேற்கத்தியரை நாம் காய்வதில்லை. தமிழ் நிலத்தை அயலவருக்கு விட்டுக் கொடுக்கின்றோம். தொழில் வளர்ச்சி என்ற பெயரில் தமிழ் நிலமும், ஆறுகளும், கடலும் பாழாவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். புதியத் தொழில்கள் என்பவை கொடுமையான முறையில் திணிக்கப்படுகின்றன. நம் காடுகளும், நீர்நிலைகளும் அழிகின்றன. உழவர்கள், கைவினைஞர்கள், பழங்குடியினரின் வாழ்க்கை பாழாவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். தமிழின் பெயர் சொல்லியும், தமிழக மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபடுகின்றோம் என்று சொல்லியும் வடவர்களோடு மட்டுமல்லாமல் மேற்கத்தியரோடும் ஒத்துழைக்கும் தலைவர்களை நாம் கொண்டாடுகின்றோம். தமிழ் மக்களின் வாழ்வியல் மேன்மை குறித்து இவர்களுக்கு அக்கறை இல்லை. தொலைக்காட்சி, திரைப்படம் என்பனவற்றின் பெயராலும் தமிழ் மக்களை இவர்கள் அழிக்கின்றார்கள். இயற்கை வேளாண்மை பற்றி இவர்களுக்கு அக்கறை இல்லை. அரசியல் அதிகாரத்தில் பங்கு பெறுவதற்காக இவர்கள் தமிழ் மக்களின் நலன்களை விட்டுக் கொடுக்கின்றார்கள். இவர்களைப் பற்றிய சரியான புரிதலை தமிழ் உணர்வாளர்கள் தேவையான அளவுக்குப் பெறவில்லை.

4. தமிழ்க் கல்வியை மாணவர்கள் நெஞ்சில் பதிய வைப்பதில் ஆசிரியர் சமூகத்திற்குத்தான் முதன்மையான கடமை இருக்கின்றது. எழுத்துப் பிழை இல்லாமல் மாணவர்களுக்குத் தமிழைக் கற்பிக்கும் கடமை தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு உண்டு. தமிழ் இலக்கியத்தை, தமிழ் உணர்வுடன் பிழை இல்லாமல் கற்றுத் தருவது உயர்நிலை / மேல்நிலைப்

பள்ளிகளில் பணிபுரியும் தமிழ் ஆசிரியர்களின் கடமை. தமிழ் மரபின் இன்றியமையாத கூறுகளென சமத்துவத்தையும், சமதர்மத்தையும் கற்றுத் தருவது கல்லூரித் தமிழ் ஆசிரியர்கள் கடமை. திருக்குறளைக் கற்பிப்பது என்பது அசலான அறவுணர்வையும், சிலப்பதிகாரத்தைக் கற்பிப்பது என்பது புரட்சிகர உணர்வையும் மாணவர் நெஞ்சில் பதிய வைப்பதாக இருக்க வேண்டும். சித்தர் இலக்கியம் தான் தமிழ் இலக்கியத்தின் மையம். சாதி, மதவெறி போன்றவை தமிழர் வாழ்வை அழிக்கும். பகுத்தறிவு என்ற பெயரில் தமிழின் பக்தி இலக்கியத்தை நாம் ஒதுக்கி விட இயலாது. தமிழ் மக்களின் மேன்மை, விடுதலை என்பனவற்றை மாணவர் நெஞ்சில் பதியவைப்பது தமிழ்க் கல்வியாளர் கடமை. தமிழின் வழி அறிவியலைக் கற்பிப்பதற்கான கலைச்சொற்களுக்கு இன்று குறைவில்லை. இம்முறையில் தமிழைக் காப்பது முதன்மையாக இன்று தமிழ் ஆசிரியர்கள் மேற்க்கொள்ள வேண்டிய கடமை. ஊதியம் மட்டுமே ஆசிரியர்களின் நோக்கமாக இருக்கக் கூடாது. சரியான கல்வித் திட்டம் அமைவதன் வழியேயும் தமிழின் ஆக்கம் கூடும். ஆசிரியர் சமூகத்திற்கு இதில் முதல் கடமை உண்டு.

5. தமிழைப் பயிற்று மொழியாக, ஆட்சி மொழியாக, நீதிமன்ற மொழியாக, வழிபாட்டு மொழியாக உருவாக்குவதில் அரசுக்கு பெரும் கடமை உண்டு என்பதை நாம் மறுக்கவில்லை. தமிழ் மக்களின் நலன்களை முதன்மைப்படுத்துகின்ற அரசு இத்தகைய கடமைகளை மைய அரசோடு போராடியும் நிறைவேற்றும். மேற்கத்தியரின் நலன்களை, முதலாளிகளின் நலன்களை முன் நிறுத்துகிற அரசு இதனைச் செய்யாது. அரசியல் சட்டம் அனுமதிக்கின்ற உரிமைகளைக் கூட மக்கள் இன்று அனுபவிக்க இயலவில்லை. அரசியல் அதிகாரம் இன்றைய நிலையில் மக்கள் நாயகத்தை தொடர்ந்து அழிக்கின்றது. கல்வியாளர்கள், அரசு ஊழியர்கள், அரசியல் கட்சியினர் முதலியவர்கள் முதலாளியத்தை, அரசியல் அதிகாரத்தின் நலன்களை உள்வாங்கிச் செயல்படுத்துகின்றனர். அடித்தள மக்களின் நலன்களை இவர்கள் முதன்மைப்படுத்துவது இல்லை. சரியான கூட்டாட்சி முறை இன்று இந்தியாவில் இல்லை. தேசிய இனத்தின் நலன்கள் இன்று தொடர்ந்து ஒழிக்கப்படுகின்றன. இந்துத்வத்தின் கை ஓங்கி வருகின்றது. பணம், பதவி, நுகர்வு வெறி, ஆடம்பரம், பொழுதுபோக்கு, போதை, திரைப்படம் முதலியவை மக்களின் மனஉறுதி, பண்பாடு முதலியவற்றை குலைக்கின்றன. இத்தகைய சூழலில்தான் தமிழ் மற்றும் தமிழ் மக்களின் ஆக்கங்கள் அழிந்து வருகின்றன / அழிக்கப்படுகின்றன. வசதிக்கு ஆங்கிலம், வாழ்விற்கு தமிழ் என்பது இன்று முளைத்துள்ள புதிய தத்துவம். செம்மொழி என்ற பெயரிலும் நடைபெற்று முடிந்திருப்பது ஒரு மோசடி.

கவிஞர் தமிழன்பன்

1. தமிழ் கற்பதால் இம்மண்ணில் வேலை வாய்ப்புகள் இல்லை. அயல் நாடுகளிலும் வேலை பார்க்கச் செல்ல முடியாதல்லவா!

வேலை வாய்ப்பு என்பது மொழி ஒன்றையே சார்ந்ததில்லை. நாட்டின் உற்பத்தி, தொழில்வளம், பொருளாதாரம் என்ற பல பரிமாணங்களின் அடிப்படையிலும், அரசின், குடிமக்களின் வேலை வாய்ப்பு உரிமைகள் பற்றியக் கோட்பாட்டின் அடிப்படையிலும் உருவாவது வேலை வாய்ப்பு. ஆங்கிலம் கற்பதாலோ, ஆங்கிலம் வழிக் கற்பதாலோ வேலை வாய்ப்பு கிடைத்துவிடும் என்பதற்கு "என்ன உறுதி இருக்கின்றது?" என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்படி அயல் மொழிக் கல்வி பெற்றும் வேலையில்லாதவர்கள் பட்டியல்தானே இப்போது நம் கைவசம் இருப்பது.

ஆங்கிலம் கற்பதால், ஆங்கில வழியில் கற்பதால் வேலைவாய்ப்பு என்பதன் பொருள் என்ன? அப்படியே அயல்நாடுகளில் வேலை தேடிப் போகிறவர்களின் எண்ணிக்கை எத்தனை விழுக்காடு? மிகக்குறைந்த எண்ணிக்கையிலான அவர்களை மட்டும் கருத்தில் எடுத்துக் கொண்டு - பெரும்பான்மையான எண்ணிக்கை கொண்டவர்கள் மீது அதை வற்புறுத்துவது - அவர்கள் மீதான உரிமைமீறல் ஆகாதா?

ஆங்கிலம் பேசுகிற அயல்நாடுகள் தவிர மற்ற நாடுகளில் வேலை பெற விரும்புபவர்கள், அவர்கள் தேவைக்கேற்ப ஜப்பானிய மொழியையோ, ஜெர்மன் மொழியையோ படித்துக் கொள்வதில்லையா! ஆனால் இம்மொழிகளை நாம் பள்ளி, கல்லூரிகளில் இங்குப் பாடமாக வைத்து எல்லார் மீதும் சுமத்துகிறோமா?

ஆங்கிலம் வழிக் கற்ற தமிழர்களின் வெளிநாட்டு நிலைமை தான் என்ன? அவர்கள் இங்கிருக்கும் தமிழ் மட்டுமே தெரிந்த கூலிவேலைக்காரர்கள் போல - அங்கெல்லாம் கூலியாட்களாகத்தானே இருக்கிறார்கள். வசதியற்ற / வசதியுள்ள கூலியாட்களை உருவாக்குவது மட்டும்தான் கல்வியா?

மேலும், வாழ்க்கை என்பது பொருளீட்டல், வசதிகளோடு வாழ்தல் மட்டும்தானா? தனது இனத்தின், மொழியின், மண்ணின், வரலாற்றுத் தொடர்ச்சியில் தானும் ஒரு கண்ணியாக இருப்பதை உணரத் தேவையில்லையா! தாய்மொழியில் கற்பது என்பது சுயமரியாதையின் அடையாளம் என்பதை உணர்ந்தால் - அதனைக்

கற்று வாழ்க்கையில் போராடி முன்னேற வேண்டும் என்ற விழிப்புணர்வு வராதா?

2. தமிழ் மீதே தமிழருக்கு நம்பிக்கை அற்ற தன்மை - தமிழின் வளர்ச்சிக்கு ஒரு தடை என்று சொல்லலாம்.

தமிழனுக்கு இப்படி தாழ்வு மனப்பான்மையை ஊட்டிய வரலாற்றுச் சக்திகள் காலந்தோறும் செயல்பட்டு வருகின்றன. தமிழ் ஓதினால் - இறைவன் அருள்பெற முடியாது. மந்திர சக்தியெல்லாம் சமக்கிருதத்திற்கு மட்டும் உண்டு என்று நம்ப வைத்த வடவர் சூழ்ச்சியை எவ்வளவோ எடுத்துரைத்தாலும் நமது மக்கள் விழிப்படையவில்லை. தமிழகத்துக் கோயில்களில் தமிழ் மட்டுமே வழிபாட்டு மொழி என்றும் - தமிழர்கள் தாமே வழிபாடு நடத்திக் கொள்ளலாம் என்றும் நிலைமையை உருவாக்க வேண்டும். வடமொழி தவிர்த்தும் பூசனைப் புரியத் தமிழை மட்டுமே பயன்படுத்தும், சிறுதெய்வ இல்லங்களை, இறை நம்பிக்கையாளர்கள் ஆதரிக்க வேண்டும். பெருங்கோயில்களில் தமிழிலும் வழிபாடு நடத்தலாம்! என்று சொல்லும் சலுகை நிலையை மாற்றித் தமிழில் மட்டுமே செய்யப்படும் என்று நடைமுறைப் படுத்த வேண்டும். வழிபாடுகளை நடத்தித்தரத் 'தமிழ்ப் பூசகரை' மட்டுமே அமர்த்த வேண்டும்.

இவ்வாறு நீதிமன்றம், கட்சி அலுவலகங்கள் எல்லாவற்றிலும் தமிழுக்கு உரிய இடத்தை நிறுவ வேண்டும்.

மைய அரசின் அலுவலகங்களாக மாநிலத்தில் அமைந்துள்ள எல்லா அலுவலகங்களிலும், இந்தியும், ஆங்கிலமும் மட்டுமே இப்போது இருந்து வருகின்றன. வலுவுள்ள மைய அரசு - தேசியக் கட்சிகள் ஒன்றாய் அமையும் நாள் வரும்போது - இந்தி மட்டுமே பயன்பாட்டுக்கு வந்து ஆங்கிலம் கைவிடப்படும் என்பதைத் தமிழர்கள் உணர வேண்டும். இந்திக்குப் பதிலாக நாம் நம் தாய் மொழியான தமிழை நிலைநிறுத்த வேண்டிய இடங்களில் எல்லாம் ஆங்கிலத்தை நிலைநிறுத்த முற்பட்டதன் விளைவு - தமிழ் ஆட்சி மொழித் தளத்தில் வாய்ப்பையும் வளர்ச்சியையும் இழந்தது.

தமிழ் எல்லாவகையிலும் பயன்பாட்டு மொழியாக அமையவல்லது என்னும் நம்பிக்கையோடு உழைப்பதில் தமிழர்கள் ஒன்றுபட வேண்டும்.

தமிழ் இலக்கிய மொழி - தொன்மையான மொழி - வளம் மிக்க மொழி என்றெல்லாம் சொல்வதன் வழித் தமிழை இக்காலப் பயன்பாட்டுக்கு ஏலாத வாழ்விழந்து போன ஒரு புதை படிவமாக

கருதி மக்கள் ஒதுங்குகின்ற – ஒதுக்குகின்ற மனப்பான்மையைத் தகர்க்க வேண்டும். தமிழ் – வாழ்வோடு ஒன்றிய மொழி மட்டுமில்லை – வாழ்வு தருகிற மொழியும் கூடத்தான் எனபதைத் தமிழகத்தில் அரசுப் பொறியை இயக்கும் தலைமைகள் நடைமுறையில் காண்பிக்க வேண்டும்.

3. தமிழ் உரிய இடத்தைத் தமிழகத்தில் பெற அரசு அமைப்புகள் முழுமுயற்சிகளைச் செய்யவில்லை.

தமிழகத்தில் தமிழை ஒரு பாடமாகப் படிக்காமலேயே முனைவர் பட்டம் வரை ஒருவர் கல்வியைத் தொடர்கிற நிலையை எந்த அரசும் இதுவரை அகற்றவில்லை. கருநாடகத்தில் மழலையர் பள்ளி முதல் 5 ஆம் வகுப்பு வரை கன்னட மொழியைக் கற்றே ஆக வேண்டும். மொழிச் சிறுபான்மையினராக இருப்பவர்களும் – கன்னட மொழி கற்றல் கட்டாயம் என்று ஆக்கப்பட்டுள்ளது. மைய அரசுப் பள்ளிகள் முதல் பதின்ம நிலைப் பள்ளிகள் வரை இம்முறையைப் பின்பற்றியாக வேண்டும்.

மராட்டிரத்தில் இம்மாநில மொழியான மராத்தி மொழியைப் படிக்க மாட்டோம் என்று குஜராத்தியர்கள் வழக்குத் தொடுத்தார்கள். இதை எதிர்த்து மராட்டிர அரசு உச்சநீதிமன்றம் வரை சென்று வாதிட்டு வென்றது. மராட்டிரத்தில் மொழிச் சிறுபான்மையினராகிய குஜராத்தியருக்கும் இம்மாநில மொழியாகிய மராத்தியைக் கற்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

தமிழ் மொழிக்காக, மாநில அரசு உச்சநீதிமன்றத்திற்குக் கொண்டு போன வழக்கு, கடந்த நான்கு ஆண்டுகளாக உறங்கிக் கொண்டிருக்கின்றது.

தமிழக அரசியல் கட்சிகள் தமிழுக்கென இவ்வழக்கில் அரும்பாடுபட்டு வழக்கிட்டு, மற்ற மாநில அரசுகள் போல் வெல்ல முடியாதா?

பேராற்றல் வாய்ந்த அரசு – அதற்குரிய பெருந்தொகையைச் செலுத்துகிற குடிமக்களுக்கு – அவர்களுடைய தாய்மொழியில் அரசை – அதுசார்ந்த அமைப்புகளை நடத்த முன்வராமை – அம்மக்களுக்கு இழைக்கிற துரோகமாகாதா?

அரசிடமிருந்து உரிமங்கள், சலுகைகள், விதிவிலக்குகள் என்றெல்லாம் பட்டியலிட்டு ஆதாயம் திரட்டும் தனியார்களின் நிறுவனங்களில் தமிழ் பயன்பாட்டில் இல்லையேல் – அவையெல்லாம்

விலக்கிக் கொள்ளப்படும் என்று வற்புறுத்த முடியாதா?

தேசியக் கட்சிகள் மும்மொழிக் கட்சிகள் பற்றியும் - திராவிட இயக்கக் கட்சிகள் இருமொழி கொள்கைப் பற்றியும் மீளாய்வு செய்ய வேண்டும். இல்லையேல் வருங்காலம் தமிழுக்கும், தமிழனுக்கும் இவை இழைத்து விட்ட தீமை பற்றிப் பேசித் தீராப்பழியைச் சுமத்தவே செய்யும். நடைமுறையில் இருமொழிக் கொள்கையால் தமிழ் பெற வேண்டிய இடத்தை ஆங்கிலம் பெற்றுக் கொண்டிருப்பதையும் மும்மொழிக் கொள்கை முழுமையாகக் கடைப்பிடிக்கப்படாத நிலையில் தமிழகம் தவிர்த்த மற்ற மாநிலங்களில் மாநிலத் தாய்மொழியோடு இந்தியாகவும், தமிழகத்தில் இந்தியோடு ஆங்கிலமாகவும் நடைமுறையிலிருந்து வருவதை மைய அரசு அலுவலகங்களில் உடனடியாகக் கருத்தில் எடுத்துக் கொண்டு செயல்பட வேண்டும்.

4. தமிழை உலக அளவில் கொண்டுபோகாத நிலையும் தமிழ் வளர்ச்சிக்கு ஒரு தடைதான்.

உலகில் உள்ள வளர்ந்த மொழிகளின் இன்றைய பன்முகப் பரிமாணங்கள் யாவை? என்பதை அறியவும் - அவற்றைத் தமிழிலே உண்டாக்கி (ஏற்கனவே இல்லையாயின்) வளர்க்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தமிழர்கள் முன் வர வேண்டும். பழைமை பேசும் மோகத்திலோ - எல்லாமே தமிழில் இருக்கின்றன என்கிற பொருண்மை பெற்ற தன்னிறைவு மனப்பான்மையிலோ - நாம் ஊறித்திளைப்பதால் எந்தப்பயனும் விளையப்போவதில்லை.

தமிழ் வளர்ச்சிக்கு என உள்ள நிறுவனங்கள் - உலகைநோக்கிய அளவில் தமிழை வளர்த்துள்ளனவா? இங்கே உள்ளவர்களுக்காக பாடங்கள் நடத்துவதோ, பட்டங்கள் தருவதோ உலகநோக்கிலானவையா? உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும், தமிழ்ப் பல்கலைக்கழகமும் உலகத்தின் பார்வையைத் தமிழின் பக்கமாகத் திருப்பப் பயன்படுகின்றனவா? உலக இலக்கியச் செல்வங்களையோ, அறிவியல், கலை வளர்ச்சிகளையோ தமிழுக்குக் கொண்டுவர என்ன முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன? இதுவரையில் குறைந்தது முன்னூறு, நானூறு அயல்மொழி நூல்களையேனும் தமிழுக்குக் கொண்டுவந்து சேர்த்திருக்கின்றனவா? தமிழ்மொழியிலிருந்து உலக அரங்கிற்கு இந்நிறுவனங்களால் அறிமுகப்படுத்தப்பட்ட நூல்கள் எவ்வளவு இருக்கும்? உலக அளவு கிடக்கட்டும், குறைந்தது இந்திய அளவில் இதைவிடக் குறைந்த அளவே வைத்துக் கொள்வோம். தென்திராவிட மொழிகள் அளவிலேனும்

இந்தக் கொண்டு-கொடுத்தல் நடைபெற இந்நிறுவனங்கள் 'பாடுபடவே இல்லையே'.

தமிழ் மொழியை விட, வடமொழி அதிகமான அளவில் உலக அரங்கில் அறிமுகமாகக் காரணங்கள் எவை என்பதைத் தமிழர்கள் - தமிழக அரசு கண்டறிய வேண்டாமா? தமிழன் அமெரிக்காவில் டாலர்களைக் கொட்டிக் கோவில்கள் கட்டுகிறான். ஆனால் அங்குத் தேவாரமோ திருவாசகமோ இல்லையே! அமெரிக்கரான பேராசிரியர் ஜார்ஜ் ஹார்ட்டுக்கு உள்ள தமிழ் மீதான நம்பிக்கையும் மற்றும் தமிழ் வளர்ச்சிக்கான செய்ற்பாடுகளும் தமிழர்களுக்கெல்லாம் பொதுவில் ததும்ப வேண்டாமா? தமிழ் இலக்கியப் படைப்பாளியின் எழுத்துகள் மட்டுமில்லை - தமிழ் அறிவியலறிஞனின் கருத்துகளும் உலக அளவில் அவன் எழுதும் தமிழிலின்று பெயர்ப்பாக வேண்டாமா?

உலக அளவில் தமிழ் கொண்டு செல்லப்படும் போது - உலகத்தில் பல்வேறு நாடுகளுக்கும் தமிழ் வளர்ச்சியில் பங்கு கொள்ள வாய்ப்பு நேரும். பல்கலைக்கழகங்களில் இலக்கிய, கலை நிறுவனங்களின் பார்வை தமிழின்பால் திரும்பும். வளம் மிக்க அறக்கட்டளைகள் - பண அணையின் மதகுகளைத் தமிழுக்கெனத் தாராளமாகத் திறந்து விடும்.

முனைவர் திருமுருகன்

நம்மைச் சுற்றி நடக்கும் இக்கால நாகரிக நிகழ்ச்சிகள் எவ்வளவுதான் முன்னேற்றம் என்று பெயர் சொன்னாலும் மக்கள் நலம் பேணுவனவாகவோ, ஒழுங்கின் - ஒழுக்கத்தின் - பாற்பட்டனவாகவோ இல்லை. அறிவியல் தொழில்நுட்பச் சுரண்டலுக்குத் துணைபோவனவே. வலியோரான செல்வர் மேலும் செழிப்புறவும், மெலியோர் இருப்பதை இழந்து போகவுமே இவை துணை செய்கின்றன. நாட்டின் முன்னேற்றம் என்று இவர்கள் பேசுவன எல்லாம் மேல் தட்டுக்காரனின் முன்னேற்றமே. முன்னேற்றம், அறிவியல் வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, ஆங்கில வழிக் கல்வி என்ற பகட்டான பெயர்களால் கீழ்த்தட்டுக் காரார்கள் நசுக்கப்பட்டு நலிந்த வாழ்கைக்கே தள்ளப்படுகின்றனர். நாம் இன்று வற்புறுத்தும் தமிழ் வழிக்கல்வியும் தமிழ் உரிமைகளும் மேல்தட்டுக்காரர்களின் சுரண்டலுக்கு இடம் கொடாமல் கீழ்த்தட்டுக் காரர்களைக் காப்பாற்றி, அவர்கள் வாழ்வு வளர்ச்சி பெறச் செய்வதற்குத்தான். முன்னேற்றம், நாகரிகம் என்ற பெயரால் அவர்களை ஏமாற்றிக் காலமாறுதல் என்ற பெயரால் அவர்கள்

தங்கள் அடிப்படை வாழ்வை இழக்கச் செய்து மேல் தட்டுக்காரர்களும், படித்த போலிக் கூட்டங்களும் அவர்கள் மீது மேலாண்மை செய்வதைத் தடுக்கத்தான்.

இன்றுவரை ஆங்கில வழி உயர்கல்வி கற்ற ஒரு படித்தவனால் கூட மக்களுக்குக் கடுகளவு நன்மையும் விளைந்ததில்லை. இந்தப் போலிக் கல்வி இம்மண்ணின் பெரும்பான்மையான கீழ்த்தட்டு மக்களுக்குத் தேவையில்லை. முன்னேற்றம் என்ற பெயரால் இன்று நிகழ்ந்துவரும் சிதைவுகளும் சீர்குலைவுகளும் தேவையில்லாதவை. இவற்றையெல்லாம் நாம் ஒழிக்க வேண்டுமானால் தமிழ் மண்ணில் நம் தமிழ் முழு உரிமை பெற்றே தீர வேண்டும். இதில் பின்தங்கிப் போவதற்கோ, தேக்கமுற்றுப் போவதற்கோ திட்டவட்டமாகச் சிறிதும் இடமில்லை.

இரணியன்

1. 'தமிழின் ஆக்கம் – தடைகள் யாவை?' என்பது பற்றிச் சிந்திக்கின்ற போது, தமிழனைப் பற்றிய மதிப்பீடுகள் சில நம்முன் எழுந்து நிற்கின்றன.

தமிழருடைய பொதுவான ஒரு பண்பு – போலிகளை நம்பிக்கிடத்தல்.

செப்பமானதும், தெளிவானதும், உண்மையானதும் எப்போதும் தமிழனுக்குக் கவர்ச்சியற்றதாகத் தெரியும். அதில் ஒரு களிப்பு (போதை) இல்லை எனத் தமிழன் எண்ணுவான். தமிழனுக்கு எப்போதும் ஒரு கவர்ச்சியும் ஒரு களிப்பும் வேண்டும். எனவே உண்மையை விடப் போலியை மிகவும் விரும்பி, அழகுபடுத்தி, அகவல்கள்பாடி, வழிபடத் தொடங்கிவிடுவான்.

அடுத்து "எதைச் செய்ய வேண்டும்" என்பதில் எப்போதும் தமிழனுக்குத் தெளிவு இருந்ததில்லை. ஆரவாரமும் கூத்தடிப்பும் அல்லாமல், அடிப்படைப் பணி எதிலும் தமிழனுக்கு நாட்டம் இருந்ததில்லை. எனவே, உலகின்முன் ஒரு கோமாளியாகவும் கூத்தாடியாகவும் மட்டுமே தமிழன் காட்சியளிப்பவனாய் உள்ளான்.

தமிழனுக்கு முறைகேடான ஆசைகள் சில உண்டு. அதில் ஒன்று, "பகைவனும் தன்னைப் பாராட்ட வேண்டும்" என்ற நப்பாசை.

சீவகசிந்தாமணியில், வெற்றியை விழைபவருக்கு என நான்கு தேவைகளைக் கூறுகின்றார் காப்பியாசிரியர். அவை

(1) நீதியால் அறுத்து அந்நிதி ஈட்டுதல்

(2) ஆதியாய அரும்பகை நாட்டுதல்

(3) மோதி முள்ளொரு முட்பகை கண்டிடல்

(4) பேது செய்து பிளந்திடல் என்பன ஆகும்.

இவற்றில், "ஆதியாய அரும்பகை நாட்டுதல்" என்னும் குறிப்பு மிகவும் கவனித்தற்கு உரியது. பகை ஆற்றலைப் பகை ஆற்றலாகவே எப்போதும் பார்க்க வேண்டும். பகைவனால் பாராட்டப்படாத வாழ்வே பெருவாழ்வாகும். பெரியார் வாழ்ந்த வாழ்வு பகைவனால் பாராட்டப்படாத பெருவாழ்வு. பகை ஆற்றலுடன் இணங்கிப் போகாதவர்களே உலகில் வரலாறு படைத்திருக்கிறார்கள். ஆனால், தமிழன் எந்தப் பகைவனோடும் இணங்க உடன்பாடு செய்து கொண்டு தன்னை இழந்துவிட்டுள்ளான்.

மேலும் தன் உடைமைகள், உரிமைகளைப் பேணிக் கொள்வதில் தமிழனுக்கு எப்போதும் விழிப்புணர்வு இருந்ததில்லை. மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது, பழங்குடி மக்களே வாழ்ந்துவந்த மலைக்கானகங்களில் தனக்கு உரிமை இல்லை எனத் தமிழன் எண்ணினான். நீர்ப் பிடிப்புப் பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் சேர்க்கக் கோர வேண்டும் என்ற "உரிமை உணர்வு" தமிழனுக்கு இருந்ததில்லை. இதனால் அண்டை மாநிலத்தவர்கள் அவற்றை அகப்படுத்திக் கொண்டார்கள். காவிரி தோன்றும் குடகு மாவட்டம் கன்னடருக்கும் அயல்நிலமே! குடகு, குடகு மக்களின் உரிமைகள், குடகு மக்கள் தமது தாயகம் கன்னட நாட்டுடன் சேர்ந்திருப்பதை விரும்பியதில்லை. தமிழன் நினைத்திருந்தால் குடகு மாவட்டத்தைத் தமிழகத்துடன் இணைத்திருக்கலாம். காவிரிக்குக் கையேந்தும் நிலை இந்த அளவு சீர்கெட்டிருக்காது.

உளவியல் நெறியில் தமிழன் ஒவ்வொருவனும் ஒரு தன்னலப் பிசாசு. தன் சொந்த நன்மைக்காக எந்தப் பொது நன்மையையும் காவு கொடுக்கும் புன்மனம் தமிழனின் உடைமை. சாதி அக்கறை தமிழனிடம் உண்டே தவிர, சமூக அக்கறை தமிழனிடம் உருவாகவில்லை. தன்னலச் சேற்றில் புரள்பவன் சமூக ஆக்கங்களை வென்றெடுப்பது கடினம்.

இந்த நிலையில், தமிழன் ஒவ்வொருவனிடத்திலும் ஒரு தாழ்வு மனப்பான்மை உண்டு. தான் பிறர் எவரையும் விடத் தாழ்ந்தவன் என்று தமிழன் உறுதியாக நம்புகிறான். எனவே அயலாருக்கு உரிய ஏதொன்றையும் புகழ்கிறான்; போற்றுகிறான். தனக்குரிய ஏதொன்றையும் மனத்தால் இகழ்கிறான்; தாழ்த்துகிறான். எனவே தமிழ் தமிழனால் தாழ்த்தி ஒதுக்கப்படுகிறது.

உட்பகை உற்றகுடி என்னவாகும் என்பதை வள்ளுவர் விரிவாகக்

கூறியுள்ளார். ஆதிநாள் தொட்டு இன்றுவரை தமிழினம் புதுப்புது உட்பகைகளை உருவாக்கிக் கொண்டே உள்ளது. புதிய புதிய வடிவங்களில் உட்பகை உற்றுச் சிதைந்து சின்னபின்னமாகி வருகிறது.

இப்படிப்பட்ட தமிழினம், தனது மொழியின் ஆக்கத்திற்குத் தானே விதித்துக் கொண்ட, பிறரால் ஏற்படுத்தப்பட்ட தடைகளைத் தாண்டுமா?

2. தமிழகக் கல்வி நிலையங்களிலிருந்து தமிழ் தமிழனால் அப்புறப்படுத்தப்பட்டுவிட்டது. தமிழ்நாட்டில் உள்ள மைய அரசு அலுவலகங்களுக்கும் தமிழ் எட்டிப் பார்க்கவும் இயலவில்லை; மாநில அரசு அலுவலகங்களுக்குள் தமிழ் கழுத்தை நீட்டி விட்டுப் பின்வாங்கிக் கொண்டது. நீதித்துறையில் தமிழ் நுழைய முடியவில்லை. மேல்தட்டுக் குடிகளின் கோவில்களில் வெளிச்சுற்றில் தான் தமிழ் ஊடாடிக் கொண்டுள்ளது. சப்பரத்திலே சாமியோடு சமஸ்கிருதம் அமர்ந்துவர, வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு, சப்பரத்தைத் தூக்கிக்கொண்டு சண்டிச்சண்டி நொண்டி நடை போடுகிறது தமிழ்.

செய்தி ஊடகங்கள் தமிழைக் குத்திக்குத்திக் கொலை செய்து கொண்டுள்ளன. பல்கலைக் கழகங்களில் பஞ்சையாய்ப் பராரியாய்த் தமிழ் விழித்துக் கொண்டுள்ளது. செய்தித் தாள்கள் தமிழைச் சிதைத்துச் சீரழித்துக் கொண்டுள்ளன.

கோடிகளை விழுங்கும் பல்கலைக்கழகங்களோ, அரசுத் தினைக் களங்களோ, தமிழுக்கு ஆக்கங்களைப் படைக்கும் என நம்புவதற்கான வாய்ப்புகள் குறைந்து விட்டன.

3. இந்த நிலையிலும் நாம் நம்பிக்கையைக் கைநெகிழ விட வேண்டியதில்லை. எத்தனையோ அரிய சிறந்த நூல்களை பிறமொழிகளிலிருந்து சிறப்பான முறையில் தமிழுக்குக் கொண்டு வருகிறார்கள் சிறிய பதிப்பாளர் சிலர். சிறுசிறு அமைப்புகள் தமிழின் ஆக்கத்திற்காக அடிப்படை முயற்சிகளை முன்னெடுக்கக் காண்கிறோம். சிறிய அமைப்புகளும் சிற்றிதழ்கள் சிலவுமே பல்கலைக் கழகங்களுக்கும் அரசுக்கும் வழிகாட்டியாகச் செயல்பட்டுள்ளன; செயல்பட்டு வருகின்றன. மூத்த சிந்தனையாளர்களுடன் தமிழுணர்வும் அறிவு வேட்கையும் மிகுந்த இளைஞர்கள் ஒட்டி உறவுகொண்டு செயல்படத் தொடங்கியுள்ளனர். ‘தாய்த்தமிழ்ப் பள்ளி’ போன்ற கல்வி நிலையங்கள் நாளும் தோன்றி, தடைகளையும் நெருக்கடிகளையும் மீறி வளர்ந்து வருகின்றன. கணினித்துறை போன்ற புதிய தளங்களில் தமிழுக்கு ஆக்கப் பணிகள் புரியும்

அமைப்புகள், ஆற்றல்கள் உலகளாவிய தளங்களில் தோன்றியிருக்கின்றன.

இவை, அல்லது இவர்கள்தாம், தமிழுக்கு ஏற்படும் தடைகளை வெல்வதற்கான விடைகளைக் கைகளில் வைத்துள்ளார்கள். இவர்கள்தாம் அரசையும், அரசின் அமைப்புகளையும் நெறிப்படுத்தவல்ல ஆற்றல் கொண்டிருக்கிறார்கள்.

தமிழினத்தைப் பிளவுபடுத்தி, கூறுபோட்டு, இவர் தமிழரில்லை அவர் தமிழரில்லை என்று பேசி உட்பகை வளர்க்கும் ஆற்றல்கள் சில தமிழ்ச் சமூகத்திற்கு இன்னல் புரியத் தொடங்கியிருந்தாலும், தமிழ் உணர்வையும் தமிழ்த் தேசிய உணர்வையும் அவர்கள் கொச்சைப்படுத்தி வந்தாலும், தெளிந்த சிந்தனையுடன் செயலுக்கு முன்வரும் இளைஞர்களும் அமைப்புகளும் இவர்களின் சிறுமதியை வெற்றி கொள்வார்கள் என்பது உறுதி.

எனவே,

சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர்;
பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர்"

என்னும் மெய்ம்மையை உணர்ந்து, சிறிய அமைப்புகள், சிற்றிதழ்களின் பணிகளை ஊக்கப்படுத்தி வரவேண்டும். சிறிய முரண்பாடுகளைத் தூக்கி எறிந்துவிட்டு, தமிழ் நலத்திற்கான பொதுத் திட்டங்களை வரிசைப்படுத்தி, தமிழ்நலச் சிந்தனையாளர்கள் ஒருங்கிணைந்து தொலைநோக்குடன் செயல்படத் தொடங்கினால் தடைகளை வெல்லும் விடைகள் தாமாக நம்முன் வந்து நிற்கும்.

வாணிகர்

வாணிகர், தம் முகவரியை
வரைகின்ற பலகையில், ஆங்
கிலமா வேண்டும்?

'மாணுயர்ந்த செந்தமிழால்
வரைக' என அன்னவர்க்குச்
சொல்ல வேண்டும்!

ஆணிவிற்போன் முதலாக
அணிவிற்போன் ஈறாக
அனைவர் போக்கும்

நாணமற்ற தல்லாமல்
நந்தமிழின் நலங்காக்கும்
செய்கை யாமோ?

– *பாவேந்தர் பாரதிதாசன்*

முனைவர் தமிழப்பன்

1) தமிழர்கள் வீடுகளால் பிரிந்து கிடக்கிறார்கள், வீதிகளால் பிரிந்து கிடக்கிறார்கள், நாடுகளால் பிரிந்து கிடக்கிறார்கள். இல்லாத – தாங்களே ஏற்படுத்திக் கொண்ட எல்லைக் கோடுகளால் பிரிந்து கிடக்கிறார்கள். இதுவே தமிழின் ஆக்கத்திற்குத் தடையாக அமைந்து விட்டது.

எங்கள் ஊர்க்காரர், எங்கள் வட்டம், எங்கள் மாவட்டம் என்ற பிரிவினை உணர்வுகளைப் பெருமையாகப் பேசி விருதுகள், பரிசுகள் கொடுப்பதில், விழாக்களை எடுப்பதில் முன் நிற்கிறார்கள். சாதி சமய கட்சிப் பிரிவுகளைச் சார்ந்து நின்று ஒருவர் மீது ஒருவர் கல்லெறிவதிலேயே கண்ணுங்கருத்துமாய்க் காலத்தைக் கடத்தி வருகிறார்கள். மொழி, இன உணர்வுகளை முன் நிறுத்தாமல் தங்களை முன்னிறுத்தி விளம்பரப் படுத்திக் கொள்வதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கிறார்கள்.

கட்சித் தலைவர்களைக் கடவுளாகக் கருதி அவர்கள் காலில் விழுவதையும், தொழுவதையுமே தங்கள் கடமையாகக் கருதி தமிழுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை மறந்து மழைக்காலத்துத் தவளைகளாக தங்களை மாற்றிக் கொண்டு விட்டார்கள்.

இந்த மண் எனக்குரியது; என் மொழிக்குரியது; என் இனத்திற்குரியது என்பதை மறந்த 'முற்றுந் துறந்த துறவிகளாகவே ஆகிவிட்டனர். அதனால் தான் தமிழ் தனக்குரிய இடத்தைப் பெறுவதிலும் தமிழர்கள் தங்களுக்குரிய உரிமைகளைப் பெறுவதிலும் காலங் காலமாகப் போராடினாலும் தோல்வியே நமக்குத் தோழனாக வந்து கொண்டிருக்கிறது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற விரிந்த மனப்போக்கைத் தவறாகப் புரிந்து கொண்டு உரிமைகளை விட்டுக் கொடுத்துக் கொடுத்து வந்தவர்களை வாழவைத்து, வாழவைத்து ஒதுங்கி, ஒதுங்கி தங்கள் சொந்த மண்ணிலேயே ஒடுங்கி ஒடுங்கிப் போய்விட்டார்கள். அவ்வாறு ஒடுங்கிவிட்ட இனத்தின் மொழி எவ்வாறு உயரும்?

மொழியும் இனமும் ஒன்றையொன்று சார்ந்து நிற்பவை. ஒன்றில்லாமல் ஒன்றில்லை. மொழியில்லாமல் இனமில்லை. இனமில்லாமல் மொழியில்லை. இதனை முற்றிலும் மறந்தவர்களாகவே தமிழர்கள் காணப்படுகின்றனர். ஏதோ வெந்ததைத் தின்போம் விதி வந்தால் சாவோம் என்று "விட்டு விடுதலை" யாகி நிற்கிறார்கள்.

தங்களைப் பற்றித் தாங்களே பெருமையாக எண்ணிக் கொள்ளும் 'தலைக்கனம்' மிகுந்து முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்து மடிகிறார்கள். அவரவர் அறிவை – அவரவர் தகுதியைக் குறைவாக மதித்து குன்றிமணியாய்க் குறுகிப் போகிறார்கள்.

நூற்றுக்கு மூன்றே விழுக்காடாக வாழ்ந்து வரும் வடமொழியாளர்கள் தங்கள் மொழியின் சிறப்பை ஒன்றுக்குப் பத்தாக ஊதிப் பெருக்கி பிறரை நம்ப வைக்கும் போது நூற்றுக்கு நூறு சிறப்புடைய தமிழின் மேன்மையைத் தாங்களும் உணராமல் பிறரை உணரவைக்கும் நெறிமுறைகளையும் பின்பற்றாமல் இருப்பதும் தமிழின் பின்னடைவிற்கு வழிகோலி விட்டது.

2) தமிழில் தொடங்கிய கலைக் களஞ்சியப் பணி ஒரு பதிப்போடு ஏன் நிற்க வைக்கப்பட்டது? தொடர்ந்து நடைபெற வேண்டிய அதனை ஏன் தொடர முடியவில்லை? ஆனால் அதே நேரத்தில் பிரித்தானிய கலைக் களஞ்சியப் பணியை எண்ணிப் பாருங்கள்.

அரசின் ஐந்தாண்டுத் திட்டங்கள் ஓரளவாவது வெற்றி பெற்றதைப் போலவாவது தமிழர்கள் தொடங்கிய தமிழ் வளர்ச்சித் திட்டங்கள் வெற்றி பெற்றிருக்க வேண்டும். ஆனால் அவை அனைத்தும் வெற்றி பெறாமல் அரைக் கிணறு தாண்டிய நிலைப்பாடாகவே அமைய நேரிட்டு விட்டது. இத்தகைய பணிகளில் ஈடுபட்ட தமிழர்களும் தங்களை முழுதாக அப்பணியில் ஈடுபடுத்திக் கொள்ளாமல் 'ஏனோ தானோ' என்று தங்கள் சொந்த வளர்ச்சியையே கருதி போராட்டங்கள், மறியல்கள் என்று தமிழ் வளர்ச்சியைப் பின்னுக்குத் தள்ளி விட்டனர்.

3) 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை' யென்றாலும் அப்பொருளையே நாடி ஓடி பேராசைப்பட்டு அலைவதை விடுத்து, சிக்கனமாக வாழத் தலைப்பட்டாலன்றி செயற்கரிய செய்தல் இயலாது. ஈக உணர்வில்லாமல் எதையும் சாதிக்க இயலாது. எனவே 'ஒல்லும் வகையெலாம் தமிழ்ப்பணி' என்பதை ஒவ்வொரு தமிழனும் உணர்ந்து தெளிந்து நடந்தாலன்றி தமிழின் ஆக்கம் எட்டாக் கனியாகவே நின்று விடும்.

தனிநிலையில் செய்யக் கூடியவை இவை குழு நிலையில் செய்யக் கூடியவை இவை என்பதில் தெளிவு வேண்டும். குழுவாகக் கூடிச் செயற்படும்போது ஏற்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதில் குரங்குப் பிடியாய் இல்லாமல் விட்டுக் கொடுத்து, குறிக்கோளை நோக்கி அடியெடுத்து வைப்பதில் குழப்பம் விளைக்காமல் நடந்து கொள்ளாது போனால் புறப்பட்ட இடத்திற்கே போய்ச் சேர்ந்த கதையாகிவிடும்.

வழிகாட்டியாக யாரைக் கொள்ள வேண்டும், யாரைத் தள்ள வேண்டும் என்பதில் தடுமாறி முதலில் ஏற்றுப் போற்றி நடுவில் தூற்றிப் பிரிந்து வேறொருவரை நாடும் போக்கு அரசியலுக்கு உகந்ததாக அமையலாம். ஆனால் அந்நிலை தமிழின் ஆக்கத்திற்குப் பயன்படாது.

மு.நா.பா. தமிழ்வாணன்

1. உலகத்திலுள்ள வளமைகளையெல்லாம் தன்னகத்தே கொண்டிருந்த தமிழகம் - வந்தாரை வாழ வைத்தத் தமிழகம - இன்றுக் கண்டாரையெல்லாம் வாழ வைத்துத் தான் அமிழ்ந்து போனத் தமிழகமாக மாறியிருக்கின்றது. திங்கள்தோறும், மும்மாரிப் பொழிந்தத் தமிழகம், வெட்ட வெட்டக் குறையாதத் தமிழ்ச் சுரங்கம், இன்று, தன் வளமையெல்லாம் திருடப்பட்டு, காட்டுவளம் குன்றி, மழை வளம் குறைந்து, கடல் வளம் அழிந்து, மரம் வளம் பாழடைந்து, சொல்ல வாய் கூசும் அளவிற்குத் துன்பத்தை அடைந்து கொண்டிருக்கின்றது. அள்ள அள்ளக் குறையாத சொற்சுரங்கம் வாராது வந்த மாமணி - உலகமொழிக் கெல்லாம் தாய் ஆகிய செந்தமிழ் படும் பாட்டை என்னவென்பது! செம்மாந்திருந்தத் தமிழினம் உலகத்துக்குப் பண்பாட்டையும், நாகரிகத்தையும், வாழ்வியல் நெறிகளையும் கற்றுக் கொடுத்த இனம், இன்று சின்னாபின்னமாக்கப்பட்டு, அயல் மாநிலங்களிலும், அயல் நாடுகளிலும் அடிமைகளாய், கூலிகளாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. இந்நிலை ஏன் வந்துள்ளது? அதற்குரிய கரணியங்கள் என்ன? இச்சிக்கல்களுக்குத் தீர்வுகள் என்ன? என்பனவற்றை அலசுவோம்.

2. தடைகள் :

- மிகப்பெரியத் தடையாக நான் நினைப்பது, தமிழர்களிடம் உள்ள இரக்க இயல்பு.
- தன் மொழியை விடவும், நாட்டை விடவும், இனத்தை விடவும், பண்பாட்டை விடவும், நிறத்தை விடவும், அயலவர் மொழி, நாடு, இனம், பண்பாடு, நிறம் ஆகியவை சிறந்தவை என்று நினைக்கும் தாழ்வு மனப்பான்மையும், அடிமைத்தனமும்.
- அயலவன் புகுத்திய சாதி, சமய சழக்குகளில் உழன்று ஒற்றுமை இல்லாமல், தன் இனத்திற்குள்ளேயே அடித்துக் கொள்ளும் தன்மை.
- தன் நாட்டுப் பெருமை, மொழிப்பெருமை, இனப்பெருமை முதலியவற்றின் வரலாற்று உண்மைப் பற்றித் தெரியாத வரலாற்று அறிவின்மை.
- தன்னலப் போக்கு, உழைப்பின்மை, தொலைநோக்குப் பார்வையின்மை, விழிப்புணர்ச்சி இல்லா மீளாத் துயில், அடக்குமுறை கண்டு அச்சம் கொள்ளல், போராட்ட இயல்பு இன்மை போன்ற பல்வேறு இழிவான இயல்புகளின் மொத்த உருவமாக இருத்தல்.
- திரைப்படக் கவர்ச்சி, அரசியல் கவர்ச்சி, கண்டவன் தலைமையையெல்லாம் ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை.

- பொழுதுபோக்கிற்கே கூடுதல் நேரத்தை ஒதுக்கிவிட்டு, நல்ல நூல்களைப் படிக்கும் பழக்கமின்மை.
- தன்னைத் தாழ்த்துகின்றவனையும் உயர்வாக மதிக்கும் தன்மை.

  "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண

  நன்னயம் செய்து விடல்"

  என்ற வள்ளுவப் பெருந்தகையின் உயரிய ஒழுக்கத்திற்குத் தமிழன் இலக்கணமாகத் திகழ்ந்தாலும், ஆழமாகப் பார்க்கும் பொழுது அவனது இளிச்சவாய்த்தனமும், ஏமாளித்தனமுமே தெரிகின்றது.

  "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்

  மெய்ப்பொருள் காண்பது அறிவு"

  என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறளை பகுத்துணரத் தவறி விட்டான்.
- தொழில் முனைப்பு இல்லாமை, எச்செயலிலும் தன்னம்பிக்கை யோடு செயல்படாமை, துன்பம் கண்டு துவண்டு தற்கொலை செய்து கொள்ளும் தன்மை.
- சாதி பற்றித் தாழ்த்திக் கூறியதும் துடித்தெழும் தமிழன், மொழி, நாடு பற்றி மற்றவர் தாழ்த்தும் பொழுது சினம் கொள்ளாத தன்மை.
- போலித் துறவிகளை நம்பி, ஏமாறும் தன்மை.
- உழைப்பின் அருமை தெரியாமல், பரிசுச்சீட்டு, சூதாட்டம் போன்ற குறுக்கு வழியில் பணம் தேடும் கையாலாகாதத் தன்மை.
- அயல் மாநிலத்தவன் வந்து தொழில் செய்து பொருளீட்டும் பொழுது கண்டும் காணாததுபோல் பொறுத்துக் கொள்ளும் தமிழர்கள், தன் இனத்தவன் தொழில் செய்து முன்னேறும் பொழுது அவன் மீது பொறாமை கொள்ளும் தன்மை.
- பொய் சொல்லித் திரிதல், புறங்கூறித் திரிதல், வம்புபேசித் திரிதல், பெண்களை இழிவாக நடத்துதல், தூய்மையற்று இருத்தல், கணியர் (சோதிடர்) கூறுவதையெல்லாம் நம்புதல், எல்லாம் ஊழின் செயல் என்று கருதி முயற்சியற்று இருத்தல், மது, போதைப் பொருட்களுக்கு அடிமையாதல், உணர்ச்சி வயப்பட்டுத் தீக்குளித்தல், அறிவு வயப்படாமை போன்ற இழி இயல்புகளின் உறைவிடமாக இருத்தல்.
- சினம் கொள்ள வேண்டியதற்கு, சினம் கொள்ளாமல், எதையும் பொறுத்துக் கொண்டு போகும் முட்டாள் தன்மை.
- தமிழகம், தமிழ், நாவலந்தீவோடு (இந்தியாவோடு) இணைந்திருத்தல்.

- மொழிக்காகவும், நாட்டிற்காகவும் போராடிய தன்னலமற்ற நல்லவர்களை மறந்ததும், முன்னோர்களின் கலைச்செல்வங்களைப் பேணாமையும்.

3. தீர்வுகள் :

- ஆடு, மாடுகள் மேய்த்து வந்த ஆரியர்கள் மீது இரக்கப்பட்டுத் தமிழர்கள் இடம் கொடுத்ததால், இன்றுத் தமிழர்கள் எல்லாத் துறைகளிலும் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். ஆகவேத் தமிழர்கள் தேவையில்லாமல் இரக்கப்ப்டுதலை விட்டுவிட வேண்டும். தகுதி பார்த்து இரக்கப்படுதல் வேண்டும்.
- ஒவ்வொரு தமிழனும் தன் மொழி, நாடு, இனம் ஆகியவற்றின் உண்மையானப் பெருமைகளையும், வரலாறுகளையும் தெள்ளத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். பாவாணர், பாவேந்தர், மறைமலையடிகள், பெருந்சித்திரனார் ஆகியோரின் நூல்களையெல்லாம் படித்தால், தன் மொழிப் பெருமையையும், நாட்டுப் பெருமையையும், இனப் பெருமையையும் நன்கு புரிந்து கொள்ளுவான். அவனிடம் உள்ள அடிமை உணர்வும், தாழ்வு மனப்பான்மையும் கண்டிப்பாக அகன்று விடும். கருப்பு நிறத்தின் சிறப்பு அறிவியல் முறைப்படித் தெரிந்தால், எல்லா நிறத்திலும் சிறந்த கருப்பு நிறம் இயற்கை நமக்களித்த நன்கொடை என்பதை உணர்ந்து கொண்டால், நிறத்தினால் ஏற்படக்கூடியத் தாழ்வு மனப்பான்மை நீங்கிவிடும்.
- தன் இனத்தை வெறுக்காமல் உண்மையாக நேசிக்கத் தொடங்கினால் இன ஒற்றுமை ஏற்படும். சங்ககாலத் தமிழர்களிடம் சாதி இல்லை. இன ஒற்றுமையைக் குலைப்பதற்கே சாதி தமிழர்களிடம் புகுத்தப்பட்டதை வரலாற்று வழி பார்க்கத் தொடங்கினால் இன ஒற்றுமை சிறத்தோங்கும். ஆரியர்களின் பிரித்தாளும் சூழ்ச்சியை ஒவ்வொரு தமிழனும் புரிந்து கொள்ள வேண்டும். மதங்கள் மாந்தர்களை நல்வழிப்படுத்தவே தோன்றின, ஒருவரையொருவர் அடித்துக்கொள்ள தேவை இல்லை என்பதை உணர்ந்து கொண்டால் மதச் சண்டைகளை நீக்கி விடலாம்.
- பல்லாண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடந்த தமிழினம் அடக்குமுறையில் ஒடுங்கிக் கிடக்கின்றது. அடக்கு முறையினால் வீழ்ந்துவிட்ட உலகின் மற்ற இனங்கள் புரட்சி அடிப்படையில் எழுச்சிபெற்ற வீர வரலாறுகளைப் படித்தால், அடக்குமுறைக்கு அஞ்சுவதைத் தடுத்துவிடுவார்கள். யாரையும் எளிதாக நம்பிவிடுவது தமிழர்களின் இயல்பாக இருக்கின்றது. யார்? எவர்? எதற்காகத் தமிழகத்துக்குள் வந்துள்ளனர் அவர்களது உள்நோக்கம் என்ன? என்பதைத் தமிழர்கள் தொலைநோக்குப் பார்வையோடு

உணர்ந்து கொள்ள வேண்டும். சப்பானியர்களிடம் இப்போக்கு நிறைந்து இருப்பதால் அவர்களை யாரும் அடிமைப்படுத்தி விடமுடிவதில்லை.

- ❖ தமிழை வைத்துப் பிழைக்கும் அரசியல்வாதிகளையும், திரைப்பட நடிகர்களையும் தமிழர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். நல்ல நூல்களைப் படிக்கும் பொழுது இவர்கள் எல்லாம் இனம் காட்டப்படுவார்கள். நல்ல தமிழறிஞர்களிடம் பழகும்பொழுதும் இவர்கள் இனம் காட்டப்படுவார்கள். நாட்டின் நலத்தில் அக்கறை இல்லாத மொழிப்பற்று இருப்பதை போல நடிக்கும் அரசியல்வாதிகளைத் தோலுரித்துக்காட்ட ஆர்வமுள்ள இளைஞர்களை வைத்து ஒரு இயக்கம் தொடங்கலாம். இவ்வியக்கத்தை வைத்து மக்களிடம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தலாம்.

- ❖ தமிழினத்தின் முதன்மையான எதிரிகள் தொலைக்காட்சிகள்தான். மக்களை சிந்திக்கவிடாமல் வெறும் தொடர்களையும், கருத்தில்லா படங்களையும் காட்டி மக்கள் நேரத்தைக் கொள்ளை அடித்து விடுகின்றார்கள். அவர்கள் கோடி கோடியாகச் சம்பாதிக்கின்றார்கள். இவர்கள் பொழுதுபோக்கு என்ற பெயரில் தன்னைத்தானே அழித்துக் கொள்கின்றார்கள். கோடிக்கணக்கான மாந்த ஆற்றல்கள் தொ(ல்)லைக்காட்சி முன் அழிந்து போகின்றன. மட்டைப் பந்து (கிரிக்கெட்) விளையாட்டை ஒழித்துவிட்டால் 2010-லேயே இந்தியா முன்னேறிவிடும். 2020 வரைக்கும் காத்திருக்க வேண்டாம்.

- ❖ உழைப்பின் அருமையையும், தன்னம்பிக்கையின் பெருமையையும் ஒவ்வொரு தமிழனையும் உணரச் செய்ய வேண்டும்.

- ❖ வட இந்தியனிடம் 20 இலட்சம் கொடுப்போம். தமிழனிடம் அந்தத் தொகையைக் கொடுப்போம். வட இந்தியன் தொழிலில் முதலீடு செய்வான். நம்பிக்கையோடு உழைப்பான். மிகுந்த பொருளீட்டுவான். தமிழன் பொருளகத்தில் முதலீடு செய்து வட்டி எடுத்து மகிழ்வான். தொழில் முனைப்பு கொஞ்சம் கூட இருப்பதில்லை. தொழில் செய்யும் எத்தனையோ தமிழர்களே இணைந்து இளைய தலைமுறைக்கு தொழில் பற்றிய முனைப்பையும் ஊக்கத்தையும் ஊட்டி, தொழில் நுட்பங்களையும் கற்றுத்தரச் சொல்லலாம். தமிழர்களின் உழைப்பை உறிஞ்சித்தான் வெள்ளை (கொள்ளை)க்காரன் கொழுத்தான். யாருக்கோ உழைத்தத் தமிழன், தனக்காகவும், தன் இனத்துக்காகவும் உழைக்க மாட்டானா! தமிழர்களை ஒருங்கு கூட்டி இதை உணரச் செய்ய வேண்டும்.

- ❖ படித்து முடித்து வெளிவரும் கல்லூரி மாணவர்களிடம் இந்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். கல்லூரியில் அனுமதி பெற்று, கல்லூரியிலேயே சிறந்த தொழில் மேதைகளை வைத்து தொழிற் பயிற்சி கொடுக்கலாம்.
- ❖ தமிழ் பணக்கார மொழி. தமிழகம் வளமான நிலம். தமிழர்கள்தான் எண்ணத்தில் வறியவர்களாக இருக்கின்றார்கள். தமிழகத்தின் இயற்கை வளங்கள் கொள்ளை அடிக்கப்படுகின்றன. காவிரி நீர் நமக்குக் கிடைக்கவில்லை. தமிழ் செம்மொழியாவதில் சூழ்ச்சி. தமிழர்கள் மூன்றாந்தரக் குடிமக்களாக நடத்தப்படுகின்றார்கள். கோயிலில் தாய்மொழி உரிமையில்லை, கல்வியில் தாய்மொழி உரிமையில்லை. நயன்மை மன்றத்தில் தாய்மொழி உரிமையில்லை. இதையெல்லாம் எதிர்த்துப் போராட உணர்வுள்ள இளைஞர்களை வைத்து இயக்கம் தொடங்க வேண்டும்.
- ❖ (இந்தியாவோடு) நாவலத்தீவோடு தமிழகம் இணைந்திருப்பதால் தமிழகத்திற்கோ, தமிழுக்கோ, தமிழினத்திற்கோ ஒரு பயனும் இல்லை.
- ❖ தமிழர்களும், தமிழும் உயர்ந்தால் தமிழினம் உயரும். தமிழகம் தரும் வளத்தையும், தமிழ் கூறும் கருத்துக்களையும் உணர்ந்தால், செயல்பட்டால் தமிழினம் தானாக உயரும். சிறப்படையும்.

வாழ்க தமிழகம்! வளர்க தமிழ்!

"கொஞ்சுவதில்லை பிறர்பால்
பிறர்செய்யும் கேட்டுக்கும் அஞ்சுவதில்லை
மொழியையும், நாட்டையும் ஆளாமல் துஞ்சுவதில்லை"

அரசியல்சீர் வாய்ந்தார் (1)

கல்லூரித் தலைவரை நான்
கேட்கின்றேன் கனிதமிழின்
பேரைச் சொன்னால்

சொல்லூறிப் போகாதோ!
வாயூறிப் போகாதோ!
தூய்த மிழ்க்கு

வல்லுறாய் வாய்த்தீரோ?
வளம்செய்யும் எண்ணமெனில்,
நீர்பி றந்த

நல்லூரின் நன்மொழியால்
அல்லாது நடந்திடுமோ
நவில்வீர் இன்றே

– பாவேந்தர் பாரதிதாசன்

1. கல்வியில் மாநில ஆட்சி மொழி ஆங்கிலம் இவற்றுடன் இந்தி அல்லது ஏதாவதொரு இந்திய மொழி விருப்ப பாடமாகக் கற்பிக்கப்பட வேண்டும்.

2. மாநிலங்களில் உள்ள மைய அரசு, மைய அரசு சார்ந்த அலுவலகங்கள் அனைத்திலும் இந்தி, ஆங்கிலம் தவிர அந்தந்த மாநில மொழியும் ஆட்சி மொழியாகப் பயன்படுத்தப்பட வேண்டும்

3. நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்படும் மசோதாக்கள், சட்டங்கள், மைய அரசின் அறிக்கைகள், மைய அரசு சார்ந்த அறிக்கைகள் அனைத்தும் இந்தி, ஆங்கிலம் தவிர மாநில மொழிகளிலும் வெளியிடப்பட வேண்டும். இது மைய அரசின் பொறுப்பு.

4. இந்தி மொழியின் பயன்பாடு, வளர்ச்சி, மேம்பாடு ஆகியவற்றிற்கு மைய அரசின் அமைச்சகத்தில் ஒரு துறை இருப்பது போல மாநில மொழிகள் மேம்பாட்டிற்கும் இப்பொழுது இருக்கும் மையத்தை விரிவுபடுத்தி தனித்தனிப் பிரிவுகள் தில்லியில் அமைக்கப்பட வேண்டும். இவற்றுள் எதற்கும் அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றம் தேவையில்லை. உடனடியாகச் செயல்படுத்த முடியும். இந்த வடிவில் மும்மொழிக் கொள்கையை ஏற்குமாறு தமிழக அரசியல் கட்சிகள் ஒன்று சேர்ந்து மைய அரசை வற்புறுத்த வேண்டும். இதற்கு மற்ற மாநிலங்களின் ஆதரவை பெறுவதும் இயலும்.

5. ஆட்சி மொழியைப் பொறுத்தவரை இந்தி பேசும் மாநிலத் தலைவர்கள் பலருடைய அணுகுமுறையில் ஆழ்ந்த தேசப்பற்றோ இந்நாட்டின் பாரம்பரியம் பற்றிய முழுமையான தெளிவோ காணப்படவில்லை. ஆட்சி பீடத்தில் தங்கள் மொழி இடம் பெற வேண்டும் என்ற உணர்வே முன்னிற்கிறது. பற்று குற்றத்தை மறைக்கிறது.

தமிழ் வழியில் படிப்பதன் சிறப்பை அரசியல் கட்சிகள் ஏழைகளுக்கு, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அடிமட்டத்தில் உள்ளவர்களுக்காக வாதாடும் கட்சிகள் கிராமந்தோறும் தெரு தோறும் எடுத்துரைத்து இன்றைய ஆங்கில வழியால் கல்வித் துறையில் உள்ள 'வருக்க பேதத்தை' அறவே ஒழிக்க வேண்டும.

மழலையர் பள்ளி முதல் பள்ளிகள் அனைத்திலும் தமிழைக் கட்டாயப் பாடமாக்குவது - தமிழ்க் குழந்தைகள் அனைத்தையும் தமிழ் எழுத்தறிவுடையவர்களாக ஆக்குவது. தமிழ் எண்ணறிவுடையவர்களாக ஆக்குவது. தமிழைத் திருத்தமாக உச்சரிக்கும் பழக்கமுடையவர்களாக ஆக்குவது; தமிழில் அடிப்படை இலக்கண அறிவுடையவர்களாக ஆக்குவது. இதுவே இப்பொழுது நம் முதற் கடமை, முழுக்கடமை.

6. கலைச் சொல் தொகுப்பில் நம் பணியை விரைவாக முடுக்கி விட வேண்டும். வளர்ந்த நாடுகட்கும் வறுமையில் வாடும் வறிய நாடுகட்கும் உற்பத்தித் திறனில் வேறுபாடு உள்ளது. வளர்ந்த நாடுகளின் ஒரு சதுரடி நிலத்தின் விளைவும் அதிகம். ஒரு கன அடி நீரின் பயனும் அதிகம். இதற்குக் காரணம் மக்களின் அறிவியலும் தொழில் நுட்பமும் தந்த முன்னேற்றங்களைப் பயன்படுத்துகிறார்கள். தமிழில் அறிவியல் கலைச் சொற்களை உருவாக்க வேண்டும்.

கலைச் சொல்லாக்கப் பணியில் நாம் அயலகத் தமிழர்களுடன் குறிப்பாக இலங்கை, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுடன் நிறுவன ரீதியில் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு சொல்லாக்கத்தில் ஒருமை காண வேண்டும். இதற்கான வழிவகைகளை விரைவாக ஆராய வேண்டும். இன்றைய கல்வி அறிவுத் துறைகள் பத்துப் பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவை ஒன்பது பல்கலைக்கழகங்கள் மற்றும் தகவல் தொழில் நுட்பத் திட்ட பணிக்குழு ஆகியவற்றின் பொறுப்பில் விடப்பட்டுள்ளன.

7. ஒவ்வொரு துணைவேந்தரும் தமது பல்கலைக்கழகத்துக்கு ஒதுக்கப்பட்ட துறைக்கான கலைச் சொல் குழுவின் தலைவராக செயல்படுவார். வல்லுநர்களைத் தேர்ந்தெடுப்பது, குழுவை அமைப்பது முதல் அதைச் செயல்படுத்துவது தாம் உறுப்பினராக உள்ள ஒருங்கிணைப்புக் குழுவினர் முடிவுகட்கு ஏற்ப கலைச்சொல் தொகுப்புகளை உருவாக்குவது வரை முழுப் பொறுப்பையும் துணைவேந்தர் ஏற்பார். ஒவ்வொரு குழுவிலும் துறை வல்லுனர்களுடன் இலக்கியத் துறையில் ஒருவரும் மொழியியல் துறையில் ஒருவருமாக இரண்டு தமிழறிஞர்கள் இடம் பெறுவர். கல்வி அறிவுத் துறைகள் அனைத்தும் பத்துப் பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டன. கல்வி ஆணையரும் அறிவியல் அறிஞருமான வா.செ. குழந்தைசாமியைத் தலைவராக கொண்டு கலைச் சொல் தொகுப்பாக்கம் இயங்கும். இது பாராட்டுக்குரிய செயலாகும்.

I	கலை மானிட இயல்	–	தமிழ்ப் பல்கலைக்கழகம்
II	சமுதாய இயல்	–	மனோன்மனியம் சுந்தரனார்
III	மனை இயல்	–	அவினாசிலிங்கம் மனை இயல்
IV	சட்டம்	–	அம்பேத்கார் சட்டப் பல்கலைக்கழகம்
V	அறிவியல்		
	I கணிதம்	–	சென்னை
	II இயற்பியல்	–	பாரதிதாசன்
	III வேதியியல்	–	பாரதியார்
	IV உயிரியல்	–	மதுரை காமராசர்
	V புவி அறிவியல்	–	பெரியார்

VI	பொறியியல், தொழில்நுட்பம்	–	அண்ணா
VII	மருத்துவம்	–	எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம்
VIII	கால்நடை மருத்துவம்	–	கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம்
IX	வேளாண்மை	–	வேளாண்மை பல்கலைக்கழகம்
X	தகவல் தொழில்நுட்பம்	–	தகவல் தொழில்நுட்பத் திட்டப் பணிக்குழு

8. உவகைப்பூ மலரும் ஒரு செய்தி. தற்போது உள்ள தமிழ் இணையம் பல்கலைக்கழகத்தின் நூலகத்தில் கலைச் சொல் களம் என ஒரு பகுதி இடம் பெறுகிறது. இதன் ஓர் உறுப்பு கலைச் சொல் தொகுப்புகள் அனைத்தும் இடம்பெரும் கலைச் சொல் வங்கி இது உலகு தழுவி வாழும் தமிழர்களின் பொது வங்கியாக உருவாகும். இதுவே இந்தத் திட்டத்தின் நம்பிக்கை நோக்கமாகும்.

இப்போது நமக்குத் தேவைப்படுவது அறிவியல் எழுச்சியே. அது தமிழ் எழுச்சியும் துடிப்புமாக இருக்க வேண்டும். இது மனம் பரப்ப வேண்டும் என்றால் ஒவ்வொரு சிற்றூரிலும் இலக்கிய வட்டம் ஆன்மிகக் குழு சினிமா ரசிகர் மன்றம் என்று இருப்பது போல் அறிவியல் குழுவும் இருக்க வேண்டும். சங்கம் வைத்து தமிழ் வளர்த்தது போல் அறிவியல் கழகம் தொடங்கப்பட்டு அறிவியல் சிந்தனைக்கு ஊக்கம் கொடுக்க வேண்டும். வளமான தமிழில் சிறந்த கலைச் சொற்களைக் கொண்டு எழுதப்பெற்ற அறிவியல் கட்டுரைகளுக்கு தொழில் நிறுவனங்கள் தகுதியான பரிசுகள் வழங்கி தமிழ் ஆக்கத்திற்கு ஊக்கம் கொடுக்கலாம்.

தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் தந்தையான மறைந்த அவினாசிலிங்கனாரை நினைவு கூர வேண்டும. தமக்கென மரபு வழி வந்த செல்வங்களை எல்லாம் கல்வி வளர்ச்சிக்கும் பெண்கள் முன்னேற்றத்திற்கும் என ஓர் அறக்கட்டளை நிறுவி அதற்கு மகிழ்ந்தளித்தார். பல்கலைக் களஞ்சியங்கள் உருவாவதற்கு அவர் காரணமாக இருந்தார். மணவை முஸ்தபா அவர்கள் ஆறரை இலட்சம் கலைச் சொற்களை ஏழு தொகுதிகளாக வெளியிட்டிருக்கிறார். ஆறு ஆயிரத்து எண்ணூறு பக்கங்களைக் கொண்டது. அறிவியல் தமிழுக்கு இப்பணி பாராட்டுக்குரியது. தமிழுக்கு நீதி – நீதிமன்றங்களில் படிவங்கள் விண்ணப்பங்கள் அனைத்தும் இன்னமும் பெருமளவும் ஆங்கிலத்திலேயே இருப்பதுவும், பெரும்பாலோர் இன்னமும் ஆங்கிலத்திலேயே வழக்காடுவதுமான நிலையே நீடித்து வருகிறது. சென்னை உலக நீதிமன்றத்தில் தமிழைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி ஆளுநர் மூலம் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று அதைச் செயலாக்க வேண்டும்.

9. தாய்த் தமிழ்ப் பள்ளிகள் நாடெங்கும் தழைக்க வேண்டும். தமிழண்ணல் கூறுவது போல தாய்த் தமிழ்ப் பள்ளிகள் நன்று பலவாகி நூறு ஆயிரமாகி வளர்ந்தால் உலகெங்கும் தமிழ் வேர்பிடித்து வளர்ந்து, தழைத்து விழுதுவிட்டுப் பரவும். வேறு எப்பள்ளியும் இதற்கு நிகராகாது. இதனை மற்ற பள்ளிகள் முன் மாதிரியாக ஏற்க வாய்ப்புள்ளது. மொழிக் கொள்கையில் நாம் கர்நாடகத்தைப் பின்பற்றினால் நம் தாய்மொழிக்கு ஆக்கம் கிடைக்கும். சிறுபான்மையினர் ஒருவேளை ஆங்கிலத்தை விட்டு விட்டுத் தம் தம் மொழியைப் படிக்கலாமே தவிர கன்னடத்தை விட்டுவிடவே முடியாது.

10. ஜப்பான் சிறிய நாடுதான். இன்று உலகத்தின் உச்சாணியில் நிற்கிறது. அறிவியல் விண் அளவு வீறு கொண்டு நிற்கிறது. "ஏன் ஜப்பான் உலகின் முதலில் நிற்கிறது" என்ற புத்தகத்தை எழுதிய பிரான்சிஸ் போகல் கூறுகிறார். 1–வது வகுப்பிலிருந்து பி.எச்.டி. வரையில் ஜப்பானிய மொழியில்தான் கல்வி கற்பிக்கப்படுகிறது. நோபல் பரிசு பெறுபவருக்குக் கூட ஆங்கிலம் தெரியாது. இதனால் ஜப்பானியர் உலகில் முன்னணியில் இருக்கிறார்கள் என்கிறார். வள்ளுவர் கூறினார் 'அறிவு அற்றங்காக்கும் கருவி' என்று நாம் இதை மேடை தோறும் முழங்கினோம். ஜப்பானியர்கள் இதை செயல்படுத்திவிட்டார்கள்.

அறிவு என்பது உலகெங்கிலும் தாய்மொழியிலிருந்து பெறப்படுவதுதான். உலகக் கல்வியினர் கண்ட முடிவு இதுதான். 'தொட்டனைத் தூறும் மணற்கேணி' தாய்மொழிக்குத்தான் பொருந்தும்.

அரசியல் கட்சிகள் பதவி நாற்காலிகளைச் சுற்றிச் சுற்றி வருவதை விட்டு தமிழ்ப் பாதுகாப்பு அணி என்ற ஒரே அணியில் நின்று முனைந்து செயல்படுக! தமிழ் அமைப்புகள் ஒன்றுபட்டுத் தங்களை முன்னிறுத்தாமல் மொழியை முன்னிறுத்திச் செயல் புரிக! தமிழ்ப் பேராசிரியர்கள், தமிழ் அறிஞர்கள், தமிழ்ப் பற்றுள்ள மாணாக்கர்கள் ஒன்றிணைந்து தமிழ்த் திசை நோக்கிச் செல்க!

உணவுதரு விடுதியினைக் 'கிளப்'பெனவேண்
டும்போலும்! உயர்ந்த பட்டுத்
துணிக்கடைக்கு 'சில்குஷாப்' எனும்பலகை
தொங்குவதால் சிறப்புப் போலும்!
மணக்கவரும் தென்றலிலே குளிரா இல்லை?
தோப்பில் நிழலா இல்லை?
தணிப்பரிதாம் துன்பமிது! தமிழகத்தின்
தமிழ்த்தெருவில் தமிழ்தா னில்லை!

– பாவேந்தர் பாரதிதாசன்

முடிப்புரை

தொடர்ந்து நம் கலந்தாய்வுக்குரியவை என்று சிலவற்றைத் தொகுத்துக் கொள்ளலாம். இவை குறித்து நண்பர்கள் தம் கருத்துரைகளை உடனடியாக வழங்க வேண்டும்.

1. எழுத்துப்பிழை இல்லாமல் இன்று எழுதுபவர் பெரும்பாலும் இல்லை. கணினியில் எழுதுபவர் தமிழில் தரமான கல்வி பெறாதவர். புத்தகங்களில் அச்சுப்பிழைகள் மலிந்து வருகின்றன. நாளிதழ்கள் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. பேராசிரியர்களும் பிழையோடுதான் எழுதுகின்றனர். வடமொழிக் கலப்பும் ஆங்கிலக் கலப்பும் குறைவதாக இல்லை. வானொலி, தொலைக்காட்சி நேர்காணல் முதலியவற்றில் ஆங்கிலக் கலப்பு கூடி வருகிறது. திரைப்படங்களிலும் இதே நிலை. இந்த நிலையை மாற்ற, ஆசிரியர்கள், தமிழ் உணர்வாளர்கள், தமிழ் இயக்கங்கள் என்ற வகையில் நாம் என்ன செய்ய வேண்டும்? மிரட்டிப் பயன் இல்லை. ஆக்க முறையில் நாம் செயல்பட வேண்டும்.

2. தமிழின் ஆக்கத்தில் அரசுக்குத்தான் பெருங்கடமை உண்டு என்று நாம் ஒதுங்கி இருக்க முடியாது. அரசை நெறிப்படுத்தும் முறையில் கட்சி சார்ந்தவர்கள் செயல்படும் முறையில் நமக்கும் கடமைகள் உண்டு. தமிழின் ஆக்கம் கருதி ஆசிரியர் அமைப்புகள் திட்டம் வகுத்துச் செயல்பட வேண்டும். மாணவர்களின் ஆளுமைத் திறன்களை வளர்க்கும் முறையிலான கல்வித் திட்டத்தின் ஒரு பகுதியாகத்தான் தமிழ்ப் பயிற்றுமொழி அமையும்.

கல்வித் திட்டத்தை வகுப்பதில் அரசுக்குத்தான் பொறுப்பு உண்டு என்று கல்வியாளர்கள் ஒதுங்கி இருக்கக்கூடாது. ஒரு தேசத்தின் வளர்ச்சியில் கல்வியாளரின் கடமை மிகமிக முக்கியமானது. பணம் பதவிக்காக கல்வியாளர்கள் மணவர் நலனை, தேசத்தின் நலனை விட்டுக்கொடுக்க முடியாது. தேசத்தின் நலன் என்ற முறையில் கல்வி மற்றும் மொழி வளர்ச்சித் திட்டத்தில் கட்சிகளுக்கு மட்டுமின்றி தொழிற்சங்கங்களுக்கும் மிக முக்கியமான கடமை உண்டு. இந்தக் கடமையிலிருந்து யாரும் பின்வாங்க முடியாது.

3. கல்வி நிலையங்களில் அனைத்து மட்டங்களிலும் மாணவர்கள் நெஞ்சில் தமிழ்ப்பற்று இருக்கத்தான் செய்கிறது. தமிழ்மொழி வகுப்புகள்தான் மாணவர்களுக்கு இனிக்கின்றன. எண்ணற்ற மாணவர்கள் தமிழில் கவிதை எழுதுகிறார்கள். கலைகளின் மீது தணியாத ஆர்வம் கொண்டிருக்கின்றனர். இவர்களின் தமிழ் உணர்வை தமிழ் ஆசிரியர்கள் வளர்க்க முடியும். ஆற்றலாக மாற்ற முடியும். மெட்ரிக்

பள்ளிகள் மருத்துவம், பொறியியல், கல்வி நிறுவனங்கள் முதலியவற்றிலும் மாணவர்களின் மனநிலை இப்படித்தான் இருக்கிறது. தமிழ் அறிவும், உணர்வும் மிக்க ஆசிரியர்களின் பொறுப்புணர்வுதான் இங்கெல்லாம் தேவைப்படுகிறது. அரைகுறைத் தமிழ் அறிவு பெற்றவர்கள் மாணவர் நெஞ்சில் தமிழ் உணர்வைத் தட்டி எழுப்ப முடியாது. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் எத்தனையோ தமிழ் ஆசிரியர்கள் தமிழ் வணிகம் செய்ய வந்தவர்கள். பட்டிமன்றங்களில் அரட்டைக் கச்சேரி செய்பவர்கள். தமிழை, தமிழ் உணர்வை மலினப்படுத்துபவர்கள். இவர்களின் போலித் தமிழ் பற்று தமிழின் வளர்ச்சிக்கு எதிரானது. தமிழை வைத்து அரசியல் நடத்துபவர்களின் கூட்டம் அதிகரித்து வருகிறது. இவர்களைக் கண்டுகொள்ளாமல் அசலான தமிழ் உணர்வாளர்கள் ஒதுங்கி இருக்க முடியாது.

4. கடுமையான நெருக்கடிச் சூழலில் நாம் இருக்கிறோம். வரலாற்றில் தமிழனுக்கு வாழ்வு உண்டா? இல்லையா? என்ற கட்டத்தில் இருக்கிறோம். தமிழை ஆற்றலாக மாற்றியாக வேண்டும். தமிழ் அழிந்து விடும் என்று சிலர் சொல்வதை நாம் முற்றாக மறுப்பதற்கு இல்லை. உழைக்கும் மக்கள் நாட்டுப்புற மக்கள் தமிழோடுதான் வாழ முடியும். நாட்டுப்புறக் கலைகள்தான் தமிழ்க்கலைக்கு ஆதாரசக்தி. தமிழிசை தமிழ் மருத்துவம் தமிழர்களின் சிற்பக்கலை தமிழர்களின் கூத்துக்கலை முதலியவற்றை நம்மால் என்றும் இழக்க முடியாது. தமிழின் தொன்மை, மேன்மை நமக்குள் தற்பெருமையாக மாறும்பொழுது நம் ஆக்கத்திறன்கள் அழிகின்றன. தொன்மையான இனம் என்ற முறையில் உலகை வாழ்விக்கிற உயர்வகையானப் பண்பாட்டை நாம் பெற்றிருக்கிறோம். ஆரிய பண்பாட்டுக்கு முற்றிலும் எதிரான தமிழ்பண்பாடு, தமிழ் மெய்யியல், தமிழ் வாழ்வியல் நமக்குரியவை. சமத்துவமும் சமதர்மமும் நம் உயிர்க்குணங்கள். இவை நம் வாழ்வின் அடிப்படைகளாக மாறினாலொழிய தமிழ்ச்சமூகத்திற்கு எதிர்காலம் இல்லை. தொல்காப்பியர் முதல் இன்று வரையிலான அற்புதமான தமிழ்ச்சான்றோர்களை நம் நெஞ்சில் நாம் தாங்கியிருக்க வேண்டும். அத்தகைய தமிழ்ச்சாதிக்கு அழிவில்லை.

5. எத்தகைய அரசியல் பொருளியல் நம்மைக் காக்கும்? உலகமயமாதலோடு நாம் ஒன்றிவிட முடியாது. மேற்கத்தியரோடு நாம் கை கோர்த்துக் கொள்ள முடியாது. இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம் குறித்து நமக்கு ஆய்வு தேவை. தமிழ்த் தேசியத் தன்னுரிமை நமக்கு இன்றைய சூழலில் முக்கியமானது. தமிழும், தமிழனும் தமிழ்த் தேசியமில்லாமல் முடியாது.

6. தமிழனுக்குத் தன்மானம் இல்லை என்று தொடங்கி குறைகளை அடுக்குகிறோம். ஏன் இல்லை? எப்படி இல்லாமல் போயிற்று? என்ற ஆய்வுக்குள் நாம் சென்றாக வேண்டும். அரசு சிலவற்றைச் செய்ய வேண்டும் என்று சொல்கிறோம். ஏன் செய்யவில்லை? என்ற ஆய்வு நமக்குத் தேவை. அரசு என்பது என்ன? இந்திய அரசின் வரலாறு என்ன? என்றெல்லாம் நாம் ஆய்வு செய்ய வேண்டும். அரசின் அங்கமாக இருப்பவர்கள் யார்? எவ்வகைச் சக்திகள்? அரசுக்கும் முதலாளியம் முதலிய சக்திகளுக்கும் என்ன உறவு? மக்கள் ஆட்சி என்பதன் உண்மை என்ன? இப்படி எல்லாம் நமக்கு ஆய்வு தேவை. அரசு செய்யும் என்ற நம்பிக்கையை நமக்குள் வளர்த்துக் கொள்ள முடியாது. இதேபோல் மதம், சாதி பற்றியும் நமக்கு ஆய்வு தேவை. பணம், பதவி நம்மை காப்பாற்ற முடியாது. ஆதிக்கத்தின் பகுதியாக நாம் மாறமுடியாது. மக்களோடு தான் நமக்கு வாழ்வு. வெற்றுத் தமிழ் பெருமை நம்மைக் காப்பாற்றாது. தமிழ்ப் புரோகிதம் நமக்குப் பயன்படாது. தமிழ் என்பது இன்று அரசியலின் பகுதியாக மாறி இருக்கிறது. எத்தகைய அரசியல் மக்களின் விடுதலைக்கான அரசியல் என்ற அறிவு தேவை. தலைமை, வழிபாடு, கட்சி வழிபாடு நம் பகுத்தறிவை அழிக்கும். தமிழ் நமக்கு உயிர் என்று பாரதிதாசன் கூறியதை நாம் நம்பத்தான் வேண்டும்.

7. ஐந்தாம் வகுப்பு வரையேனும் தமிழில் கல்வி அமைய வேண்டும் என்பது நம்மவர் கோரிக்கை. ஒரு வேளை தாய்த் தமிழ்ப் பள்ளிகளில் கற்பவர் நெஞ்சில் இந்த ஐந்தாண்டு அளவிலேயே தமிழ் ஆழப் பதிந்து விடும். காலமெல்லாம் தமிழ் இவர்களோடு கூட வரும். ஆனால் பிற எல்லாவகைப் பள்ளிகளிலும் பயில்பவர், பின்னர் ஆங்கிலத்தில் தொடரும் போது அடுத்த சில ஆண்டுகளிலேயே தமிழை அறவே மறந்து விடுவர். இத்தகைய கோரிக்கையில் நமக்குப் பயனில்லை. குறைந்தது மேல்நிலைக் கல்வி முற்றுப்பெறும் அளவுக்கேனும் தமிழ்தான் பயிற்றுமொழியாக அமைய வேண்டும. மருத்துவம், பொறியியல் உட்பட அனைத்துப் பாடங்களையும் தமிழில் கற்றுக் கொள்வதற்குத் தேவையான கலைச் சொற்களை தமிழ் அறிஞர்கள் உருவாக்கி உள்ளனர். அரசுக்குத்தான் அக்கறை இல்லை. சென்ற நூற்றாண்டில் 60 களில் தொடங்கிய இம்முயற்சியை அரசு கைவிட்டது. ஆங்கிலத்தை கைவிட்டால் இந்தி புகுந்து விடும் என்று கருதி நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டோம். இப்பொழுது ஆங்கிலத்திற்கு அடிமையாகி விட்டோம். இன்றைய உலகச் சூழலில் ஆங்கிலம் நமக்குத் தேவை என்பதை நாம் மறுக்க முடியாது. எதற்கு ஆங்கிலம் என்பதில் நமக்குத் தெளிவு வேண்டும். உலக அளவிலான அறிவுத் துறைகளை ஆங்கிலம் வழி நாம் கற்க முடியும். தகுதி மிக்க ஆங்கில

நூல்கள் தமிழுக்கு வந்துசேர அரசும் பல்கலைக்கழகங்களும் உச்ச அளவில் முயற்சி மேற்கொள்ள வேண்டும். அடுத்த பத்தாண்டுகளுக்கேனும் இம்முயற்சி உறுதியாக தொடர்ந்தால் ஒழிய தமிழ் ஆக்கம் பெற முடியாது. தனிப்பட்ட சிலர் செய்த இவ்வகை முயற்சிகளைக் கூட அரசு செய்யவில்லை. தமிழர்களின் அரசு இதைச் செய்து இருக்கும், தமிழ் மாநிலம் சரிவர உருவாகவில்லை. இன்றும் சென்னை மாநிலம் தான் என்று தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் கருதுகின்றனர். கர்நாடகத்தையும், கேரளாவையும் பார்த்து சிலவற்றை கற்கத்தான் வேண்டும். அவர்களைப் போல் நாம் வெறியர்களாக மாறக்கூடாது.

8. பழந்தமிழ் இலக்கியத்தை இன்றும் கூட தேவையான அளவுக்கு திறனாய்வுப் பார்வை இல்லாமல்தான் நாம் கற்கிறோம், கற்பிக்கிறோம். ஆங்கிலத்தின் வழியேதான் திறனாய்வுப் பார்வையை குறைந்த அளவுக்கேனும் தெரிந்து கொண்டோம் என்பது உண்மைதான். தொல்காப்பியர், வள்ளுவர், இளங்கோ, கம்பர் முதலிய பெரும் புலவர்கள் இலக்கியம், சமூகம் பற்றிய திறனாய்வுப் பார்வை இல்லாமல் செயல்படவில்லை. கடந்த சில பத்தாண்டுகளில் தமிழில் திறனாய்வுப் பார்வையை மேம்படுத்தியவர்கள் பற்றி தமிழ் உணர்வாளர்கள் கவனம் கொள்ளவில்லை. சிற்றிதழ் வட்டாரத்தில் வளர்ந்து வரும் திறனாய்வுப் பார்வையை தமிழ் உணர்வாளர்கள் தமிழ்த் துறையினர், தமிழ் இயக்கத்தினர் கண்டு கொள்வது இல்லை. கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேல் சிறுகதைகள், புதினங்கள், கவிதைகள், நாடகங்கள் என்ற முறையில் தமிழில் வளர்ச்சி பெற்று வரும் புதிய தமிழ் இலக்கியம், பழந்தமிழ் இலக்கியத் தரத்திலிருந்து எந்த வகையிலும் தாழ்ந்ததாக இல்லை. தமிழ் இலக்கியத்தை இவர்கள்தான் இன்று புதுமை செய்கிறார்கள். இவர்கள் வியக்கத்தக்க அளவில் திறனாய்வை மேம்படுத்துகிறார்கள். பெண்ணியம், தலித்தியம், நவீனத்துவம் என்றெல்லாம் இவர்கள் பேசுகிறார்கள். தமிழின் ஆக்கத்தோடு இவர்கள் இன்றியமையாத உறவுடையவர்கள். இவர்கள்தான் இன்று மேற்கத்திய சிந்தனைகளையும் தமிழில் கொண்டு வந்து கொட்டுகிறார்கள். தமிழ் உணர்வு இவர்களுக்கு இல்லையென்று குற்றம் சாட்டுவதன் மூலம் இவர்களுக்குள் செயல்படும் தமிழின் ஆற்றலை நாம் கண்டு கொள்ளத் தவறுகிறோம். தமிழ் உணர்வு என்பதற்குள் பகுத்தறிவுக்கு இடம் தருகிற அளவுக்கு மார்க்சியத்திற்கு இடம் தர மறுக்கிறோம். பின் நவீனத்துவம் முதலிய அணுகுமுறைகளால் தமிழ் இலக்கியம் வளம்பெறும் என்பதை ஒப்புக் கொள்ள மறுக்கிறோம். தமிழின் ஆக்கம் குறித்து நமக்கு அக்கறை இருக்குமானால் இவைபற்றியெல்லாம் ஆய்வு தேவை.

9. இறுதியாக நண்பர்களுக்கு, ஆய்வாளர்களுக்கு ஒரு வேண்டுகோள். தமிழின் ஆக்கம் குறித்து நம் சிந்தனைகள் பல முனைகளில் விரிவுபெற உங்கள் பங்களிப்பை பெரிதும் வேண்டுகிறோம். கடந்த ஒரு நூற்றாண்டு அளவில் தமிழின் ஆக்கத்திற்கு என உழைத்த தமிழறிஞர்கள், தமிழ்ச் சிந்தனையாளர்கள் பற்றி செறிவாக எழுதுங்கள். இன்றும் நம் தமிழுணர்வை, தமிழ் அறிவை, தமிழ்க் கலை உணர்வை நமக்குக் கற்றுத் தருகிற நம் ஆசிரியர்கள், தமிழ் அறிஞர்கள் பற்றி எழுதுங்கள். இவர்களின் வாழ்வும் பணியும் என்ற முறையில் தொகுத்து எழுதுங்கள். தமிழகம் முழுவதிலும் செயல்படுகிற பல நூறு தமிழ் அமைப்புகள், ஒவ்வொன்றும் உருப்படியாக என்ன செய்கின்றது என்பது பற்றி எழுதுங்கள். இன்றும் நம்மோடு வாழ்ந்து வருகிற முதிர்ந்த தமிழ் அறிஞர்கள், சான்றோர்களைக் கண்டு அவர்கள் பணிகளைத் தொகுக்கும் முறையில் நேர்காணல் என்ற வடிவிலும் எழுதுங்கள். தமிழிசை, சிற்பம் முதலிய கலைகளில் ஈடுபட்டவரின் அனுபவங்களை எழுதுங்கள். வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் ஆகியவற்றில் தமிழ் உணர்வோடு செயல்படும் கலைஞர்கள் குறித்து எழுதுங்கள். தேவையான தமிழ் எழுத்துச் சீரிதிருத்தம், கல்வெட்டு ஆய்வு, தொல்லியல் ஆய்வு, கணினியில் தமிழ் ஆய்வுக்கான வாய்ப்புகள் பற்றி எழுதுங்கள். தமிழ் மக்களின் ஆக்கத்திற்காக உழைக்கும் பெண் போராளிகள், சமூகப் போராளிகள் பற்றி எழுதுங்கள். இயற்கை வேளாண்மை, தாய்த்தமிழ்ப் பள்ளி ஆகியவற்றின் அனுபவங்களை தொகுத்து எழுதுங்கள். தமிழ் இயக்கங்களின் வாழ்வும் வரலாறும் நமக்கு முக்கியம். கூடவே உங்கள் திறனாய்வுகளும் தேவை. என் பொருள் வசதி மிக மிக குறைவு. உங்கள் நிதி உதவியை பெரிதும் வரவேற்கிறேன். நாம் செய்தவை, செய்யத் தவறியவை பற்றியெல்லாம் எழுதுங்கள். மதிப்பீடு மற்றும் திறனாய்வு இல்லாமல் நாம் முன் செல்ல முடியாது.

அரசியல்சீர் வாய்ந்தார்

தெலுங்குதமிழ் நாட்டினிலேன்?
செத்தவட மொழிக்கிங்கே
என்ன ஆக்கம்?

இலங்கும் இசைப் பாட்டுகள்
பிறமொழியில் ஏற்படுத்த
இசைய லாமோ?

நலங்கண்டீர் தமிழ்மொழியால்
நற்றமிழை ஈடழித்தல்
நன்றோ? சின்ன

விலங்கதுதான் சோறிட்டான்
மேற்காட்டும் நன்றியைநீர்
மேற்கொள் ளீரோ.

– பாவேந்தர் பாரதிதாசன்

தமிழ்ப்புலவர் ஒன்றுபடும் நன்னாளே
தமிழர்க்குப் பொன்னா ளாகும்!
தமிழ்ப் பெருநூல் ஒன்றேனும் ஒற்றுமையைத்
தடைசெய்யக் கண்ட துண்டோ?
தமிழ்ப் புலவர் தமக்குள்ளே மாறுபட்ட
தன்மையினால் இந்நாள் மட்டும்
தமிழ்ப் பெருநா டடைந்துள்ள தீமையினைத்
தமிழறிஞர் அறிகி லாரோ?

தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டில்
முதலமைச்சாய் வருதல் வேண்டும்
தமிழ்ப்பகைவன் முதலமைச்சாய்த் தமிழ்நாட்டில்
வாராது தடுத்தல் வேண்டும்.
நமை வளர்ப்பான் நந்தமிழை வளர்ப்பவனாம்!
தமிழ் அல்லால் நம்முன்னேற்றம்
அமையாது சிறிதும் இதில் ஐயமில்லை,
ஐயமில்லை அறிந்து கொண்டோம்.

– பாவேந்தர் பாரதிதாசன்

ஆசிரியரும் வெளியிடுபவரும் :

கி.பழனிச்சாமி (ஞானி)

24, வி.ஆர்.வி. நகர், ஞானாம்பிகை ஆலை (அஞ்சல்),
கோயம்புத்தூர் - 641 029. தொலைபேசி : 0422 - 2648119

அச்சாக்கம் : மயூரா, கோயமுத்தூர் 641 009